லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-6 நவம்பர்-2018 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai




# பாலியல் கல்வி அவசியமா?



வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
▪ புற்று நோய்கள்
▪ இருதய அடைப்புகள்
▪ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
▪ சிறுநீரக கற்கள்
▪ சிறுநீரகக் கோளாறுகள்
▪ கல்லடைப்பு
▪ சதையடைப்பு
▪ சிறுநீர் பிரச்சனை
▪ இரத்த ஓட்டம் சீராகும்
▪ சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
▪ கபம் ▪ காசம் ▪ சைனஸ்
▪ கண்பார்வை கோளாறுகள்
▪ வாதம் ▪ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093,
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, முன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்




# உடைந்துபோன நான்காவது தூண்!

ஏப்ரல் மாத 'நக்கீரன்' இதழில் ஆளுநரைச் சம்பந்தப்படுத்தி எழுதப் பட்ட ஒரு கட்டுரைக்கான எதிர் நடவடிக்கையாக கோபால் கைது நடவடிக்கையைக் கூறினாலும், அந்த இதழின் தொடர் விமர்சனங்களே இந்தக் கைதுக்கான அடிப்படை என்பது வெளிப்படை.

நிர்மலாதேவி விவகாரத்தில் தமிழக ஆளுநரை இணைத்துக் கட்டுரை எழுதியதற்காக 'நக்கீரன்' இதழின் ஆசிரியரும் பதிப்பாளருமான கோபால் கைதுசெய்யப்பட்டதும் அவர் மீது இந்தியதண்டனைச்சட்டப்பிரிவு124 பயன்படுத்தப்பட்டிருப்பதும் கருத்துரிமையின் மீதான கொடும் தாக்குதலே அன்றி வேறில்லை. நல்லவேளையாக இந்த அடாவடியை நீதிமன்றம்தடுத்து நிறுத்தியிருக்கிறது ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலை இனி தொடர்ந்தால் வாய்மை இழந்து பொய்மை நிமிர்ந்துவிடும். பேடிகளும், கேடிகளும், லஞ்ச ஊழல்வாதிகளும் நாட்டை வேட்டைக்காடாக மாற்றிவிடுவார்கள். கோபால் விடுதலையில் பேராபத்தில் இருந்து தமிழகம் மட்டுமல்ல இந்தியாவும் காப்பாற்றப்பட்டுயிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஊடகங்களுக்கான சுதந்திரம் என்றுமே பரந்து விரிந்ததாக இருந்ததில்லை. "நாட்டிலேயே ஊடகர்கள் அதிகமான அவதூறு வழக்குகளைச் சுமக்கும் மாநிலம்" என்ற பெயரை ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு அடைந்ததை இங்கு நினைவு கூரலாம். 2011 - 2016 காலகட்டத்தில் மட்டும் ஊடகர்கள் மீது 213 வழக்குகள் தமிழ்நாட்டில் போடப்பட்டன.

குடியரசுத் தலைவர், ஆளுநர் உள்ளிட்டோர் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களது பணியைத் தடுக்கும் வகையில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது பயன்படுத்தப்படும் சட்டப் பிரிவான 124-ன் கீழ் 'நக்கீரன்' கோபால் மீது வழக்கு பதியப்பட்டதையும், கூடவே அந்த இதழில் பணிபுரியும் 30-க்கும் மேற்பட்டோர் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் வேறு எந்த விதத்தில் புரிந்துகொள்வது? பத்திரிகை விநியோகஸ்தர்கள் மீதெல்லாம்கூட வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருப்பது அராஜகமே அன்றி வேறில்லை. ஆட்சியாளர்களும் ஆளுநரும் விமர்சனங்களுக்கு முகங்கொடுப்பவர்களாகத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்கவே முடியாது.

இந்த விவகாரத்தில் மிகுந்த பாராட்டுக்குரியவர் சென்னை பெருநகரக் குற்றவியல் நடுவர்மன்ற நடுவர் கோபிநாத். அராஜகமான ஒரு கைது நடவடிக்கையை நிராகரித்து கோபாலை விடுவித்ததன் மூலம் தமிழ்நாட்டின் ஊடகச் சுதந்திரத்தை அவர் காத்திருக்கிறார். நாடு முழுவதுமே கருத்துரிமை பெரும் சவாலை எதிர்கொள்ளும் இக்காலகட்டத்தில், இந்தக் கைது ஒரு தவறான முன்னுதாரணம் ஆகி, ஒரு தொற்றுவியாதி போல பல மாநிலங்களுக்கும் பரவும் ஆபத்து தவிர்க்கப்பட்டிருக்கிறது!

- ஆசிரியர்

நாட்டின் பத்து பெரிய நகரங்களில், 120 கார்ப்பரேட் நிறுவனங்களில், 30-லிருந்து 50 வயதுக்கு உட்பட்ட 2,800 பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் முக்கால்வாசிப் பேருக்கு இரண்டுக்கும் மேற்பட்ட 'தொற்றா நோய்கள்' இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உடற்பருமன், உயர் ரத்த அழுத்தம், அதீத கொழுப்பு, நீரிழிவு, இதயநோய், சிறுநீரக நோய், புற்றுநோய், முதுகுவலி, மன அழுத்தம், ரத்தசோகை, ஹார்மோன் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு 100-ல் இருவர்கூட தொடக்கத்திலேயே சரியான சிகிச்சைக்குச் செல்வதில்லை என்று சுட்டிக்காட்டும் இந்த அறிக்கை, வேலைப் பளு, நேரமின்மை, நோய் அறியாமை போன்ற காரணங்களால் பெண்கள், மருத்துவரிடம் செல்லாமல், கைப்பக்குவம் பார்த்துக்கொண்டு சமாளிக்கின்றனர் என்றும் கவலை தெரிவித்திருக்கிறது.

# பெண்களின் முன்னேற்றமே தேசத்தின் வளர்ச்சி!

ஆரோக்கியத்துக்கு அடிப்படை - நேரத்துக்கு உணவு. ஆனால், வேலைக்குப் போகும் பெண்களில் பெரும்பாலானோர் காலை உணவைத்



தவிர்க்கின்றனர். ஊட்டச்சத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கிடைத்த உணவைக் கொறித்துவிட்டு அலுவலகம் செல்கின்றனர் அல்லது அலுவலக உணவகங்களில் கிடைக்கும் நொறுக்குத்தீனிகளை வாங்கி உண்கின்றனர். இந்தப் பழக்கம் அல்சரில் தொடங்கி ரத்தசோகை வரை பல பாதிப்புகளுக்குக் காரணமாகிறது. இவற்றோடு பயணக் களைப்பும் சேர்ந்துகொள்ள, உடல்சோர்வும் உளச்சோர்வும் பெண்களை ஆட்கொள்கின்றன.

உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்க முடிவதில்லை என்பதும் இதற்கு ஒரு காரணம். இந்த உடற்பருமன் பிரச்சினை உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, மாரடைப்பு, பக்கவாதம், ஹார்மோன் பிரச்சினை போன்ற ஆபத்தான நோய்களுக்கும் அடித்தளம் இடுகிறது என்பது கவனிக்கத்தக்கது. 30 ஆண்டுகளுக்கு முன்புவரை மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை பெண்களுக்கு 50 வயதுக்கு மேல் மாதச்சுழற்சி நின்ற பிறகுதான் ஏற்பட்டது. இப்போதோ இந்த இரண்டு நோய்களும் 30 வயதிலேயே ஏற்படுவதுதான் இதற்கு சாட்சி.

சமீப காலத்தில் வேலைக்குப் போகும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படுவது அதிகரித்துள்ளது. இதற்கும் அவர்களுடைய வாழ்க்கைமுறைதான் காரணமாகிறது. வேலை கிடைத்த பிறகே திருமணம் செய்துகொள்வது என்று பெரும்பாலான பெண்கள் திட்டமிடுகின்றனர். இதனால், அவர்களுக்குத் திருமண வயதும் குழந்தை பெற்றுக்கொள்ளும் வயதும் தள்ளிப்போகிறது. 30 - 35 வயதில் குழந்தையைப் பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கும், பணி நிமித்தம் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கத் தவறுபவர்களுக்கும் மார்பகப் புற்றுநோய்/ கருப்பை வாய்ப் புற்றுநோய் வரும் வாய்ப்பு மற்றவர்களைவிட இரண்டு மடங்கு அதிகரிக்கிறது. இன்னும் சிலருக்குக் குழந்தையின்மை பிரச்சினையும் உண்டாகிறது.

வேலைக்குப் போகும் பெண்களுக்குப் பணிச்சுமை தொடர்பான அழுத்தங்கள் இருக்கும். வீட்டில் குழந்தைகள் இருந்தால், வயதானவர்களைக் கவனிக்க வேண்டியிருந்தால் இன்னும் அழுத்தங்கள் அதிகமாகும். இவை எல்லாம் சேர்ந்து அவர்கள் உறக்கத்தைக் கெடுக்கும். இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் அவர்கள்

ஆரோக்கியத்தைக் கெடுக்கும். அதேநேரத்தில், கணவருக்கோ, குழந்தைக்கோ இந்தப் பிரச்சினைகள் ஏற்படும்போது முன்னுரிமை கொடுத்துக் கவனிப்பதுபோல் தங்களுக்குள்ள உடல்நலப் பிரச்சினைகளை அவர்கள் உடனே கவனிப்பதில்லை. ஏற்கெனவே சுமக்கும் அலுவல் சுமை, குடும்பச்சுமை ஆகியவற்றோடு இவற்றையும் சுமந்து கொள்ளப் பழகிக்கொள்கின்றனர். இது அவர்களுடைய ஒட்டுமொத்த ஆரோக்கியத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைத் தாமதமாகவே புரிந்துகொள்கின்றனர்.

முதலில் ஆரோக்கிய உணவில் அக்கறை வேண்டும். நேரத்தோடு சாப்பிடும் பழக்கம் வேண்டும். காலை உணவுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். கேன்டீனில் சாப்பிடும் சிறுதீனிகளுக்குப் பதிலாக வீட்டிலிருந்து பழங்களை எடுத்துச் சென்று சாப்பிடலாம். அலுவலகத்தைச் சுற்றியோ, வீட்டைச் சுற்றியோ நடக்கலாம். எந்த வழியிலும் உடற்பருமனுக்கு இடம் கொடுக்கக் கூடாது. திட்டமிட்டுப் பணி செய்வதும், எதிலும் சரியான ஒழுங்குமுறையைக் கடைப்பிடிப்பதும் தேவையில்லாத பரபரப்பைக் குறைத்துவிடும். மன அழுத்தம் விடைபெறும். ஆரோக்கிய வாழ்வுக்குப் போதிய ஓய்வும் உறக்கமும் அவசியம்.

வேலைக்குப் போகும் பெண்களின் ஆரோக்கியத்தைக் காப்பதில் அவர்கள் பணிசெய்யும் நிறுவனங்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது. பெண்கள் இரவுச் சூழல் பணிகளைக் குறைத்துக்கொள்வது, பெண்களுக்கான கழிவறை, ஓய்வறை, உடற்பயிற்சி அறை, உள் விளையாட்டு அரங்கம் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துதருவது, அன்றாட ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கு இலவச மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவது, வருடந்தோறும் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுசெய்வது, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவக் குழுவினர் நிறுவனத்துக்கே வந்து ரத்த அழுத்தம் அளவிடுவது, ரத்தச் சர்க்கரை / கொழுப்பு அளவுகளை எடுப்பது, இசிஜி, எக்கோ பரிசோதிப்பது போன்றவற்றுக்கும் ஏற்பாடுசெய்தால், பல உடல்நலக் கேடுகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துக் களைந்துவிடலாம். இதன் மூலம் பெண்களின் உடல் நலனை உறுதிப்படுத்தலாம். குடும்பத்தின் தூண்களாக விளங்கும் பெண்களின் நலன் பாதுகாக்கப்படும்போது, ஒட்டுமொத்த நாட்டுமக்களின் நலனும் மேம்படும்!

– அகிலாண்டேஸ்வரி


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

மக்கள் விசாரணை
MAKKAL VISARANAI

# மக்கள் விசாரணை

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 இதழ்-6 நவம்பர்-2018

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.(Hons).



**ஆசிரியர் குழு**
V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

**நிர்வாக ஆசிரியர்**
வீ.சிவசங்கரன், B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன், P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி, V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், M.சத்தியராஜ் நாமக்கல், A.பாலகிருஷ்ணன், K.செந்தில்குமார் கோவை, R.ஜெயா, சென்னை, நாகராஜ் மூணாறு, S.ரமேஷ், மாரிமுத்து உளுந்தூர்பேட்டை, சுசீ ஈஸ்வர் தென்காசி, N.சிலம்பரசு தர்மபுரி, வெங்கடேசன் தி.மலை, P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா, Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா, V.கிஷோர் குமார், சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், ஆரணி ஏழுமலை, M.முருகன், சத்தியநாராயணமூர்த்தி, N.குப்புசாமி, முரளி, நீலகண்டன், N.சீனிவாசன், G.ஆனந்த்குமார்

**சட்ட ஆலோசகர்கள்**
M.குணசீலன் B.Com., M.L.,
M.சுதாகர் B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

**புகைப்பட நிருபர் : M.சந்தோஷ்சிவன்**

**இதழ் வடிவமைப்பு: ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



ஆலுவலகம் :
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை – 600078.
E-mail: writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
Website: www.makkalvisaranai.com
Contact: 93821 33334, 044 - 4861 5321

# ஊடக சுதந்திரம் பறிபோகிறதா?



ஒருவேளை நான் விடுவிக்கப்படவில்லை என்றால், 'நக்கீரன்' இதழ் மறுநாள் காலையிலேயே வெளியாகியிருக்கும். அடுத்த இதழ் அதேநாள் மாலையோ, அடுத்த நாள் காலையிலேயோ வந்திருக்கும். இதுபோன்ற பல அடக்குமுறைகளை நாங்கள் சந்தித்திருக்கிறோம். ஒருகாலத்தில் தமிழகம் முழுக்க 'நக்கீரன்' இதழ்களை ஆட்சியாளர்கள் வாங்கி எரித்ததெல்லாம் உண்டு. நாங்கள் மறுபடியும் இதழ்களை அச்சிட்டு வெளியிட்டோம். மீண்டும் எரித்தார்கள். அவர்கள் எரிக்க எரிக்க, நாங்கள் மீண்டும் மீண்டும் வெளியிட்டுக்கொண்டே இருந்தோம். ஏற்கெனவே 'பொடா' வழக்கு வரை நாங்கள் சந்தித்திருக்கிறோம். எனவே, இது கடுமையான தாக்குதல் என்றாலும், புதிதல்ல.

ஒரு கட்டுரைக்காகத் திடீர் கைது, முன்னுதாரணம் அற்ற நிகழ்வாக இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 124 பிரயோகம், ஊடகங்களின் ஒட்டுமொத்த எதிர்க்குரல், நீதிமன்றத்தின் குறுக்கீடு, விடுவிப்பு என்று மீண்டும் பரபரப்பு எல்லைக்குள் வந்திருக்கிறார் 'நக்கீரன்' கோபால். ஆளுநர் சம்பந்தப்பட்ட ஒரு கட்டுரைக்காகக் கைதுசெய்யப்பட்ட விதம் அவரைப் புண்படுத்தியிருந்தாலும், அவரது துணிச்சலை அது துளியும் பாதிக்கவில்லை. ஊடகங்கள் இன்று எதிர்கொள்ளும் மோசமான சூழலை விரிவாகப் பேசினார்.

இந்த சட்டப் பிரிவை - ராஜவிரோதக் குற்றத்துக்கான சட்டப் பிரிவு என்கிறார்கள். ஒரு ஆளுநர் அல்லது உயர் பதவியில் இருப்பவரைப் பணிசெய்யவிடாமல் தடுப்பது - அதாவது, அவரை நேருக்கு நேர் சந்தித்துச் செயல்பட விடாமல் தடுப்பது. கையில் கத்தியுடன் சென்று 'கொலை செய்துவிடுவேன்' என்று அவரை மிரட்டுவது, அடிப்பது போன்ற குற்றத்தில் ஈடுபட்டால்தான் இந்த சட்டப் பிரிவைப் பயன்படுத்த முடியும் என்கிறார்கள். வாய்மொழியாக மிரட்டினால்கூட இந்த சட்டப் பிரிவு பொருந்தாது என்று சொல்கிறார்கள். என்ன கொடுமை என்றால், இன்று வரை ஆளுநர் பன்வாரிலாலை நேரில் ஒருமுறைகூடப் பார்த்திராதவன் நான். விமான நிலையத்தில் என்னை நடத்திய விதமும் ஒரு பயங்கரவாதியை நடத்துவதுபோலவே இருந்தது.

கழிப்பறையிலிருந்து வெளியில் வந்த என்னைச் சுற்றிவளைத்துக் கைதுசெய்தார்கள். என் செல்பேசியைப் பறித்துக்கொண்டார்கள். இவ்வளவு கடுமையான சட்டப் பிரிவைப் பிரயோகிப்பது, இந்தக் கைது இவையெல்லாம் 'நக்கீரன்' கருத்துச் சுதந்திரத்துக்கு மட்டும் எதிரானது அல்ல. ஒட்டுமொத்த இந்திய ஊடகங்களுக்கும் எதிரான, ஜனநாயகத்துக்கு எதிரான தாக்குதல் இது. இந்த விஷயத்தில் 'இந்து' ராம் வெகுண்டெழுந்து நீதிமன்றம் வந்து நிற்க இதுதான் முக்கியமான காரணம். இந்த விஷயத்தில் ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகளோடு பொதுச் சமூகமும் நீதிமன்றமும் தார்மிகமாக ஒரே நேர்க்கோட்டில் நின்றதுதான் பெரிய பலம்.

பிரச்சினை என்னவென்றால், ஒரு வழக்கு ஒரு பத்திரிகை நிறுவனத்தைப்

# 'நக்கீரன்' கோபால் பேட்டி

பொருளாதாரரீதியாக எப்படி முடக்கும் என்பது நம் பொதுச் சமூகத்துக்குத் தெரியவே தெரியாது. நெல்லை மாவட்டம், வள்ளியூரில் பத்தாண்டுகளாக நடந்தது ஒரு வழக்கு. ஒவ்வொருமுறையும் சென்னையிலிருந்து வள்ளியூர் சென்றுவரும் செலவு, வழக்கறிஞர் கட்டணம் என்று எவ்வளவு செலவாகும் என்று யோசித்துப்பாருங்கள். நூற்றுக்கணக்கான வழக்குகளை எதிர்கொண் டிருக்கிறது 'நக்கீரன்'. ஒரே விஷயம் மக்களுடைய ஆதரவு. பொருளாதாரரீதியாக நான் சம்பாதித்த பணத்தில் பெரும் பகுதியை வழக்குகளில்தான் விட்டிருக்கிறேன்.

எதைத் தனிப்பட்ட விவகாரம் என்கிறீர்கள்? 'நம்மை ஆளுகின்ற அரசில் ஒரு முக்கியப் பொறுப்பில் இருப்பவர்கள் தூய்மையாக இருக்க வேண்டும்; திறந்த புத்தகமாக இருக்க வேண்டும்' என்று காந்தி சொல்கிறார். சமூகத்தில் ஒரு தனிமனிதன் தவறிழைப்பதும், பொறுப்பில் இருப்பவர் தவறிழைப்பதும் ஒன்றா? நித்யானந்தா தன்னை முற்றும் துறந்த துறவியாக வெளியே காட்டிக்கொள்கிறார். அவர் ஒரு நடிகையுடன் இருக்கும் வீடியோவை எப்படித் தனிப்பட்ட விவகாரம் என்று சொல்ல முடியும்?

நிர்மலாதேவி விவகாரம் தொடர்பாக, ஏப்ரல் 8 இதழில் முதலில் எழுதினோம். ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆளுநர் மாளிகைக்கு ஏன் கோபம் வருகிறது? "ஆளுநரை நான்கு முறை சந்தித்ததாக வாக்குமூலம் கொடுத்தி ருக்கிறார் நிர்மலா தேவி. அதனால், மின்சார வயரைக் கடித்து ராம்குமார் இறந்ததாகச் சொல்லப்பட்டதைப் போல், ஒருநாள் நிர்மலாதேவிக்கும் நடக்கும்" என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. எழுதினோம். இது எப்படி தனிப்பட்ட ஒருவரின் விவகாரம் ஆகும்?

எங்கு தவறு நடந்தாலும் அதை வெளிக்கொண்டுவருவதே 'நக்கீரன்' வரலாறாக இருந்திருக்கிறது. தாமிரபரணி படுகொலையைப் பெரிய அளவில் வெளிக்கொண்டுவந்தது யார்? 'நக்கீரன்'. அன்றைய அரசாங்கத்தையே அது அசைத்தது. அப்போதைய திமுக ஆட்சிக்காலத்தில் மட்டும் எங்கள் மீது 22 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்த தூதராக என்னை கருணாநிதி அனுப்பியபோதும்கூட திமுக அரசு போட்ட வழக்குகள் நிலுவையில்தான் இருந்தன. ஒரு பத்திரிகை செய்தி வெளியிடுகிறது என்றால், தவறு நடந்திருக்கிறதா இல்லையா, அதில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்பதுதான் பேசப்பட வேண்டிய விஷயம். தமிழ்நாட்டு மக்களிடம் இன்றைய ஆட்சியைப் பற்றி என்ன நினைக்கிறார் கள் என்று பேசுங்கள். அவ்வளவு கொந்தளித் திருக்கிறார்கள். அப்படியென்றால், அவர்கள் எல்லாம் திமுககாரர்களா?



கூடுதல் துணிச்சலைத்தான் தந்திருக்கிறது. பத்திரிகையாளன் வாயை மூடவே முடியாது. ஏனென்றால், அவன் சமூகத்தின் குரல். நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஒன்றுதான், ஒரு சமூகத்தில் ஊடகங்கள் குரல் எவ்வளவு சுதந்திரமாக வெளிப்படுகிறதோ, அவ்வளவுக்கு அந்தச் சமூகம் ஜனநாயகத்தில் முன்னிற்கும். பிரான்ஸில் 'சார்லி ஹெப்டோ' பத்திரிகை அலுவலகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டு, பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டபோது ஒட்டுமொத்த பிரான்ஸும் ஊடக சுதந்திரத்துக்காகத் திரண்டு நின்றதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஊடகங்களோடு மக்கள் கைகோத்து நின்றால், எவ்வளவு பலமிக்க சக்தியாலும் ஊடகங்களை வீழ்த்த முடியாது.

**- இர்வின்**



# அரசு பள்ளிகள் மூடுவிழா!

அரசுப் பள்ளிகளில் போதுமான ஆசிரியர் களையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கி, கல்விச் சூழலை மேம்படுத் தாமல் அவற்றை மூடிவிடச் சொல்கிறது. 'வெளிப்பாட்டை' அடிப்படையாக வைத்துத் திட்டமிடச் சொல்கிறது நிதி ஆயோக். அதாவது, மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தால் ஏன் என்று ஆராயாமலும், உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருந்தால் ஏன் என்று கேட்காமலும், அப்பள்ளிகளை மற்ற பள்ளிகளுடன் இணைக்கச் சொல்கிறது. இணைத்தல் என்றால், ஒரு பள்ளியின் மாணவர்களை மற்றொரு பள்ளியில் சேர்ப்பது. ஏற்கெனவே இருந்த பள்ளியை மூடிவிடுவது. ஆனால் அவ்வாறு சொல்லக் கூடாது. இணைத்தல் என்றே சொல்ல வேண்டும் என்கிறது நிதி ஆயோக். அதுபோல அரசுப் பள்ளிகளைத் தனியாரின் பராமரிப்பில் விடுவதற்கும் ஆலோசனை களை வழங்கியுள்ளது. அதன்படி பலவீனமான பள்ளிகளை அடையாளம் கண்டு 'இணைக்கும்' பணியில் இறங்கியிருக்கிறது தமிழக அரசு.

தொடக்கக் கல்வியைப் புரிந்துகொண்டால் இத்தகைய சிக்கல் ஒருபோதும் எழாது. தொடக்கக் கல்வி என்பது குழந்தைகளின் சிந்திக்கும் திறன் வடிவம் பெறுவது. அந்த நிலையில், குழந்தைகளின் எண்ணவோட்டம் மிக முக்கிய மான பங்கை வகிக்கிறது பெற்றோர்களும் குழந்தைகளின் பாதுகாப்புக்குத் தான் முக்கியத்துவம் தருவார்கள். இந்தப் பின்னணியில் தொடக்கக் கல்வியை அணுகினால் அருகமைப் பள்ளியின் அவசியம் புரியும். நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் நாடுகளில்கூட தொடக்கக் கல்வியை அரசுதான் வழங்குகிறது. இந்தியா போன்ற வளர்முக நாட்டில், கல்வியை நிதி மூலதனத்துக்கு ஏற்ற லாபம் ஈட்டும் தொழிலாகப் பார்ப்பது வேதனைக்குரியது.

அரசியல் விடுதலை அடைந்து எழுபது ஆண்டு களைக் கடந்த பிறகும், விடுதலை பெருவதற்கு முன்பிருந்த கல்வித் துறைச் சிக்கல்கள் தீரவில்லை என்றால், அதற்கான காரணத்தை ஆராய வேண்டும். சாதிய ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பாலின சமத்துவமின்மை என்று பலநிலைகளிலும் பாகுபாடுகள் குறையவில்லை என்பதோடு மேலும் சிக்கலாக்கியுள்ளன. இதற்கு மூலகாரணம், சமமான கல்வி வாய்ப்பை இதுவரைக்கும் ஏற்படுத்தத் தவறியதுதான். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்துவதாகவே பள்ளிக் கல்வியும் பல அடுக்கு கொண்டதாக அமைந்துள்ளது.

கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன் அச்சட்டம் உருவாக்கும் சிக்கலை உணராமலேயே அதை நடைமுறைப்படுத்துவதற்கான கோரிக்கைகள் எழுந்தன. அரசுப் பள்ளியில் மழலையர் பிரிவைத் தொடங்குவதற்குப் பதிலாக, தனியார் பள்ளியின் மழலையர் பிரிவில் மாணவர்களைச் சேர்க்கும் வேலையில் அரசே ஈடுபட்டது. அவ்வாறு சேர்க்கப்பட்ட குழந்தைகளின் கல்விக் கட்டணத்துக்காகவே ஆண்டொன்றுக்குச் சுமார்

*2011-12* கல்வியாண்டில் இவ்வாறு அரசால் கட்டணம் செலுத்தி தனியார் பள்ளியில்

எல்கேஜி வகுப்பில் சேர்க்கப்பட்டவர்கள் தற்போது தனியார் பள்ளிகளில்தான் ஐந்தாம் வகுப்பு படித்துவருகிறார்கள். தனியார் பள்ளிகளில் எல்கேஜி வகுப்பில் அரசே சேர்த்துவிட்ட பிறகு, அந்தக் குழந்தைகள் ஒன்றாம் வகுப்புக்கு அரசுப் பள்ளிக்கு எப்படிப் படிக்க வருவார்கள்? அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்ததற்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

அரசுத் தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் கிடையாது. விளையாட்டு, இசை ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பணியிடங்கள் கிடையாது. வகுப்புக்கு ஓர் ஆசிரியர், பாடத்துக்கு ஓர் ஆசிரியர் என்பதும் கிடையாது. ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இரண்டு அல்லது மூன்று வகுப்புகளுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைதான் உள்ளது. ஒருபுறம் அரசுப் பள்ளிகளின் இந்த நிலையைச் சரிசெய்ய முன்வராத அரசு, தாமே தனியார் பள்ளியில் மாணவர்களைக் கொண்டுபோய் சேர்க்கும் பணியில் ஈடுபட்டது. அரசின் இத்தகைய இருமுனைத் தாக்குதலால்தான் அரசுப் பள்ளிகள் நலிவுற்றன. இந்தத் தவறுகளைச் சரிசெய்யாமல், அரசுப் பள்ளிகளை மூடுவது என்பது குழந்தைகளின் கல்வி உரிமையை மறுப்பதாகும்.

அரசுப் பள்ளியை வலுப்படுத்த நிறைய வழிமுறைகள் உள்ளன. ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியையும் அருகமைப் பள்ளிகளாக அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கும் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒரு புவியியல் எல்லை வகுக்க வேண்டும். அப்பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு அதுதான் பள்ளி என்று அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பள்ளியில் இருக்க வேண்டிய அனைத்து வசதிகளும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். சேர்க்கை கோரும் ஒவ்வொரு குழந்தையும் அப்பள்ளியில்தான் விண்ணப்பிக்க வேண்டும். அப்பள்ளியில் சேர்க்கை வேண்டாம் என மறுத்தால் அதற்குண்டான காரணத்தைக் கேட்க வேண்டும். குறையிருந்தால் உடனே களையப்பட வேண்டும்.

கல்வி அடிப்படை உரிமையெனில், மக்கள் அதை முழுமையாக அரசிடமிருந்துதான் பெற முடியும். அரசுப் பள்ளிகள் இருக்கும்போதே தனியார் பள்ளிகளின் கட்டணம் பன்மடங்கு அதிகம் என பெற்றோர்கள் புகார் தெரிவிக்கிறார்கள். இருக்கிற அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கையையும் குறைக்க ஆரம்பித்துவிட்டால், தனியார் பள்ளிகளிடம் மக்கள் சிக்கித்தவிக்கும் நிலை உருவாகாதா?

**– M. தரணி**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 4861 5321**

**Email : writermouriyan@gmail.com**

# பாதுகாப்பற்ற நிலையில்

# பெருகிவரும் மகளிர் விடுதிகள்:

தமிழ்நாடு முழுவதும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் மற்றும் தனி நபர்களால் ஆயிரக்கணக்கான மகளிர் விடுதிகள்நடத்தப்படுகின்றன. பெரும்பாலானவற்றில் அடிப்படை வசதிகள் இல்லை. கண்காணிப்பு கேமரா போன்ற பாதுகாப்பு அம்சங்கள்கிடையாது. தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையில் வடபழனி, திருவான்மியூர், சூளைமேடு, மேத்தா நகர், விருகம்பாக்கம், அண்ணாநகர், வில்லிவாக்கம் உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் புற்றீசல் போல மகளிர் விடுதிகள் முளைத்துள்ளன. குடியிருப்புகள் வணிக நோக்கில் மகளிர் விடுதிகளாக மாறியிருக்கின்றன.

இந்த சட்டப்படி அந்தந்த மாவட்ட ஆட்சியரின் அனுமதியில்லாமல் தனியார் மகளிர் விடுதிகளோ அல்லது இல்லங்களோ நடத்தக்கூடாது. இச்சட்டம் அமலுக்கு வந்த இரண்டு மாதங்களில் உரிமம் வாங்காவிட்டால் சம்பந்தப்பட்ட மகளிர் விடுதியின் உரிமையாளருக்கு 2 ஆண்டுகள் சிறைதண்டனை, ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் சுகாதாரச் சான்று பெற வேண்டும். சமையல் செய்யும் மகளிர் விடுதிகளாக இருந்தால், உணவு பாதுகாப்புத் துறையிடம் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய (FSSAI) சான்று பெற வேண்டும்.

நாட்டில் பெண்கள், குழந்தைகள் பாதுகாப்புக்கு இன்னமும் முழு உத்தரவாதம் இல்லை. கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் செயல்பட்ட தனியார் அனாதை இல்லத்தில் 2 மைனர் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. இச்சம்பவம் குறித்த விசாரணையின்போது அந்த இல்லம் அரசு அங்கீகாரம் இல்லாமல் இயங்கியது தெரியவந்தது. இதுபோல வெளியே தெரிந்த பாலியல் பலாத்கார சம்பவங்கள் தவிர, வெளியே தெரியாத பல சம்பவங்களும் உண்டு. உரிமம் இல்லாமல், அடிப்படை வசதிகள் இல்லாமல், முற்றிலும் பாதுகாப்பற்ற சூழலில் ஏராளமான மகளிர் விடுதிகள் செயல்படுவது அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதையடுத்து, மகளிர் தங்கியிருக்கும் விடுதிகள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு மகளிர் விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தை (2014) அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்தார்.

பாதுகாப்புக்கு தேவையான தீ தடுப்பு சாதனங்களுடன் இருப்பதாக தீயணைப்புத் துறை சான்றளிக்க வேண்டும். வீடு அல்லது குடியிருப்புகளில் வணிக நோக்கத்துடன் மகளிர் விடுதிகள் செயல்படக்கூடாது. நபர் ஒருவருக்கு 120 சதுரஅடி வீதம் அறைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். மகளிர் விடுதி மற்றும் அங்கு தங்கியிருக்கும் பெண்கள் குறித்த அனைத்து தகவல்களும் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்துவது அவசியம். பெண்களையே வார்டன்களாக நியமிக்க வேண்டும். முன்னாள் ராணுவத்தினர், ஊர்க்காவல் படையினர், ஓய்வுபெற்ற காவல்துறையினர் மட்டுமே பாதுகாவலராக நியமிக்கப்பட வேண்டும். மகளிர் விடுதிகளில் 24 மணி நேரமும் பாதுகாவலர்கள் விழிப்புடன் இருத்தல் அவசியம். மகளிர் விடுதி நடத்துவதற்கு இதுபோல ஏராளமான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஆவணங்களில் மட்டுமே உள்ளன. விரல்விட்டு எண்ணும்மகளிர் விடுதிகளிலேயே இவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்கின்றனர் விவரம் அறிந்தவர்கள்.

பாதுகாவலர் இருப்பதில்லை. அப்படியே இருந்தாலும் அவர் பணியில்ஈடுபாடு காட்டுவதில்லை. நுழைவுவாயில் எப்போதும் பாதி திறந்த நிலையிலே இருக்கும். பகல் மற்றும் இரவு நேரங்களில், ஏன் நள்ளிரவில்கூட யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்று மகளிர் விடுதி நடத்துவோரும் பாதுகாவலரும் கண்டு கொள்வதில்லை என்று புகார் கூறப்படுகிறது.

பல்வேறு குற்ற சம்பவங்களுக்குப் பிறகு வீடுகளிலும் வணிக வளாகங்களிலும் கண்கா

ணிப்பு கேமராக்கள் பொருத்தும்படி மாநகர காவல்துறை அறிவுறுத்தி வருகிறது. ஆனால், மகளிர் விடுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதை உள்ளூர் போலீஸார் உறுதி செய்வதில்லை. இதனால் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இருக்கிறது.

வீடு அல்லது குடியிருப்புகளில் குடும்பத்தினர் வசிப்பதாக ஆவணத்தில் இருக்கும். அதற்கான சொத்து வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணம், மின் கட்டணம் செலுத்தப்படும். ஆனால், குடியிருப்புகளில் வணிக நோக்கில் மகளிர் விடுதிகள் செயல்படுவதுடன், அதற்கான சொத்து வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணம், மின்கட்டணம், சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கு வீட்டு உபயோகத்துக்கான கட்டணமே கட்டப்படுகிறது. வர்த்தக ரீதியான பயன்பாட்டுக்கான கூடுதல் கட்டணம் செலுத்தப்படுவதில்லை. இதனால், அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுவதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

மகளிர் விடுதிகளில் பெயர்ப் பலகைகூட இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் வெறுமனே விடுதியின் பெயர், தெரு பெயர், செல்போன் எண் மட்டுமே இருக்கும். மாவட்ட ஆட்சியர் வழங்கிய மகளிர் விடுதிக்கான உரிமம் எண் இடம்பெறுவதில்லை. விசாலமான அறை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதாரமான கழிப் பிடம் இல்லை. ஆனால் கட்டணம் மட்டும் கூடுதலாக வசூலிக்கின்றனர் என்கின்றனர் விடு தியில் தங்கியிருக்கும் பெண்கள் பலர். மகளிர் விடுதிகளைப் பற்றிய முழு விவரங்கள் சமூக நலத் துறையிடமோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத் திலோ இல்லாதது வேதனையிலும் வேதனை.

மகளிர் விடுதி நடத்துவோர் அதற்கான உரிமத்தை மாவட்ட ஆட்சியரிடம் இருந்து பெற வேண்டும். இல்லாவிட்டால் விடுதி நடத்துவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பத்திரிகைகள் மூலம் அறிவுறுத்தியுள்ளது. சமூக நலத்துறை. பணியாளர்கள் பற்றாக்குறையால் அனைத்துப் பகுதிகளிலும் மகளிர் விடுதிகளை ஆய்வு செய்ய முடியவில்லை என்ற காரணமும் கூறப்படுகிறது.

மகளிர்விடுதிகள் தொடர்பான தகவல்களை தெரிவிப்பதற்காக 181 என்ற ஹெல்ப்லைன் எண்ணை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.



சென்னையைப் பொருத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் மாவட்ட சமூக நல அலுவலரை 044 - 25264568 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் 8-வது மாடியில் உள்ள மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகத்துக்கு நேரில் சென்றும் புகார் கொடுக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வாடகைக்கு வீடு கொடுத்தவர்கள் தங்களது வீடுகளில் குடியிருப்பவர்கள் பற்றிய விவரங்களை சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் எழுத்துப்பூர்வமாக கொடுக்க வேண்டும் என்று காவல்துறை உத்தரவிட்டுள்ளது. ஆனால், மகளிர் விடுதிகளில் தங்கியிருக்கும் பெண்கள் பற்றிய விவரங்கள், அந்த விடுதிகளை நடத்துவோர் பற்றிய தகவல்கள் எதுவும் உள்ளூர் போலீஸாரிடம் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

படிக்கும் மாணவியர், வேலை பார்க்கும் பெண்கள் மீது பாலியல் வன்முறை பரவலாக அதிகரித்து வரும் நிலையில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதை அரசு தலையாயக் கடமையாகக் கொள்ள வேண்டும். எல்லாவற்றிலும் வெளிப்படைத்தன்மை வந்து கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் மகளிர் விடுதிகளின் விவரங்களை சமூக நலத் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இடம்பெறச் செய்வது அவசியம்.

- V.அருணாசலம்

முனைவர் ஆ.மவுரியன்





வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(13)

# மணலூர் மணியம்மாள்

## எண்ணிலடங்கா விவசாயப் போராட்டங்களில் பங்கெடுத்த இரும்புப் பெண்மணி

**சாதித் தீண்டாமைக்கு எதிராகவும், தேச விடுதலைக்காகவும், பொது வுடைமையின் போர்வாளாய் காவிரி வளநாட்டை காத்திட்ட ஒரு மாபெரும் களப் போராளி குறித்த கதை இது. ஒரு முட்பாதையில் குடும்ப உறவுகள், சமுதாய உறவுகள் எல்லாம் எதிர்ப்புக்களாக மாறிவிட்ட நிலையில், அரசியல் கட்சிகளின் (ஆண்) ஆதிக்கங்களையும் எதிர்த்து ஒரு பெண் தேசியவாதியாக, சமுதாயவாதியாக நின்று தாழ்த்தப்பட்ட பண்ணையடிமைகளுக்கும், உழைப்பாளருக்கும் நிதி கோரிப் போராடி இறுதியில் ஒரு தியாகியாகவே தன் இன்னுயிரையும் ஈந்தாள்.**

*அவருக்கு பெற்றோர் இட்ட பெய ரென்னவோ வாளம்மாள்தான். மணி போன்ற அன்னையின் திருவடிவால் அவர் மணியம்மையானார். பார்ப்பனக் குடும் பத்திலே பிறந்த மணியம்மாள் எல்லா பார்ப்பனப் பெண்களைப் போல்தான் கடவுளை பூஜித்துக் கொண்டிருந்தார். அதுவும் 27 வயது இளம் விதவையென்றால் கேட்கவா வேண்டும்? மணியம்மை இளம் வயதிலேயே தந்தையை இழந்தவர். குடும்ப நெருக்கடி காரணமாக தன்னை விடவும் 20 வயது மூத்த, ஒரு நாகப்பட்டிணம் வக்கீலுக்கு வாக்கப்பட்ட மணியம்மாள் 10 ஆண்டுகளிலேயே விதவை எனும் கானகத்தில் வீழ்ந்து பட்டாள். கணவன் இறப்புக்குப் பின்னால், பேராசை கொண்ட வர்களான கணவனின் உறவினர்கள் முன்னால், சீமானான கணவனின் சொத்தில் சல்லிக்காசும் வேண்டாமென தூக்கி எறிந்துவிட்டு தாய்வீடு வந்து சேர்ந்தாள்.*

*தனக்கே உரித்தான ஈர மனமும், சீர்தூக்கி ஆயும் கூர் குணமும் மெல்ல மெல்ல விதவை எனும் கொடுங்காட்டிலிருந்து அவரை வெளியே கூட்டிவந்தன. தேசிய விடுதலைப் போராட்ட இயக்கத்தின்பால் ஈடுபாடு கொண்ட மணியம்மை காந்தி தஞ்சை வந்த போது அவரைச் சந்தித்து காங்கிரசில்இணைந்தார். மாகாணக்கமிட்டி உறுப்பினர் பதவிவரை உயர்ந்த அவர், இதர காங்கிரஸ் காரர்களைப் போலல்லாமல் பண்ணை அடிமை முறையை எதிர்த்து தனது சொந்தப் பகுதியில் உறுதி வாய்ந்த போராட்டம் நடத்தினார். தனது சொந்தப் பண்ணையிலேயே சாதி அடிமைத் தனத்தை எதிர்த்து பெரும் போரட்டம் நடத்தினார். அதன் காரணமாகவே அவர் பண்ணையில்*

இருந்து சொந்தக் குடும்பத்தினரால் தள்ளி வைக்கப் பட்டார்.

ஜஸ்டீஸ் கட்சிக்காரர்களைப் போலவே காங்கிரஸ்காரர்களும் பதவி மோகம் கொண்டவர்கள் என்றும், பண்ணையார்களுக்கே காங்கிரசில் பெரு மதிப்பு என்றும் அவர் தனது சொந்த அனுபவத்திலிருந்து உணர்ந்து கொண்டார். மெல்ல மெல்ல ஜனசக்தி இதழ் மூலம் பொதுவுடைமை கொள்கைகளின் பால் ஈடுபாடு கொண்ட மணியம்மை, ஒரு முழுநேர கம்யூனிஸ்ட் ஆனார். சீனிவாசராவ், மணலி கந்தசாமி போன்ற முன்னோடி போராளிகளின் தொடர்பின் மூலம் தனது அரசியல் அறிவை வளர்த்துக் கொண்ட அவர், பெரும் அமைப்பாளராகவும், செல்வாக்கு மிகுந்த தலைவராகவும் உயர்ந்தார். அவரின் பண்ணை அடிமைக்கு எதிரான போராட்டத்தாலும், வர்க்க அணிதிரட்டலாலும் ஆத்திரமடைந்த அதிகார வர்க்கம் அவரைக் கொல்ல முயன்று, கொடும் தாக்குதலில் காயத்துடன் உயிர் தப்பினார்.

பெண்மையின் உடை உள்ளிட்ட பல்வேறு குறியீட்டு அம்சங்களை அடிமைத்தனத்தின் அடையாளம் எனக் கருதிய அவர், அவற்றைத் துறந்து தனது கூந்தலை வெட்டிக் கொண்டார். கிருதா வைத்துக்கொண்டு ஆண்களைப் போலே வேட்டி சட்டை அணிந்து கொண்டார். மேலும் தற்பாதுகாப்புக்கென சிலம்பமும் கற்றுத் தேர்ந்தார். கையில் சிலம்பத்தோடும், வேட்டி சட்டையோடும் தனி ஒருவராகவே தஞ்சைப் பகுதியெங்கும் சென்று விவசாய இயக்கங்களைக் கட்டி வளர்த்தார். போகும் இடமெல்லாம் மணியம்மையை தங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்க வந்த தாயாகவே மக்கள் கருதி வரவேற்றனர். நிலப் பிரபுக்களும், காவல் அதிகாரிகளும் மணியம்மையைக் கண்டு நடு நடுங்கினர்.

எண்ணிலடங்கா விவசாயப் போராட்டங்களில் பங்கெடுத்த அந்த இரும்புப் பெண்மணி, தொழிலாளர் மத்தியில் வேலை செய்யவும் தயங்கவில்லை. நாகப்பட்டிணம் பகுதியில் மணியம்மையின் தொழிற் சங்கப் போராட்டம் இன்று வரை மக்களால் பேசப்பட்டு வருகின்றது. அவர் கொடும் சிறை வாசத்துக்கும் அஞ் சவில்லை. அதேபோல திராவிட மற்றும் நீதிக்கட்சிகளின் ஒருசார்புத் தன்மையையும் கபட வேடங்களையும், நிலப்பிரபுத்துவ ஆதரவுப் போக்கையும் தோலுரிக்கவும் தயங்கவில்லை. தன் வாழ்நாள் பூராவும் மக்களுக்காகவே வாழ்ந்த அந்த மாபெரும் பெண்மணி, கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த பயன்பாட்டு வாதத்தாலும், ஆணாதிக்க சிந்தையாலும் , அதிகார போதையாலும், யந்திர கதியாகிப்போன அமைப்பு முறைகளாலும் கடைசிக் காலத்தில் கட்சியால் சரிவர நடத்தப்படவில்லை என எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணண் தனது மணியம்மையின் வரலாறு தொடர்பான நாவலான “பாதையில் பதிந்த அடிகளில்” குறிப்பிடும் அம்சம் நிச்சயம் ஆராயத்தக்கது.

வழக்கமான சுதந்திரப் போராட்ட வீராங்கனை போலல்லாமல் சாதித் தீண்டாமை, பெண்ணடிமை, தேச விடுதலை, வர்க்கப் போராட்டமென ஒரு தலைமைக்கான சகல அம்சங்களோடு போராடியதால் தான், மணியம்மை முக்கியத்துவமானவராகிறார். **1953** ஆம் ஆண்டு மான் முட்டி அவர் சாகும்வரை உறுதி மிகுந்த கம்யூனிஸ்ட்டாவே இருந்தார்.

“அம்மா” எனும் அற்புத வார்த்தை அசிங்கப்பட்டு நிற்கும் இந்தச் சூழலில் இத்தகு உண்மையான அம்மாக்கள் எங்கோ ஓர் மூலையில் மறைத்து வைக்கப் பட்டு விட்டார்கள்.

தொடரும்

# வெற்றிபெறுமா?

# மு.க.ஸ்டாலின் அரசியல் பிரவேசம்

மு.கருணாநிதி - தயாளு தம்பதியின் இரண்டாவது மகனாக 1953, மார்ச் 1 அன்று பிறந்தார் ஸ்டாலின். தொண்டர்களால் 'அய்யா' என்றழைக்கப்பட்ட பெரியார், அண்ணாவின் முழுப் பெயரான அண்ணாதுரை இருவர் பெயரையும் போற்றும் வகையில் 'அய்யாதுரை' என்ற பெயரையே மகனுக்குச் சூட்ட முடிவெடுத் திருந்தார் கருணாநிதி. அதே காலகட்டத்தில் மறைந்தார் ரஷ்ய அதிபர் ஸ்டாலின். அவர் மீது தனக்கிருந்த மதிப்பை வெளிப்படுத்தும் விதமாக ஸ்டாலின் பெயரைச் சூட்டினார் கருணாநிதி. அந்நாட்களில் சர்ச் பார்க் பள்ளியில் இருபாலரும் படிக்கலாம். "ஸ்டாலின் பெயரை மாற்றிக்கொள்ள முடியுமா?" என்று கேட்டது பள்ளி நிர்வாகம். பள்ளியையே மாற்றிவிட்டார் கருணாநிதி.

திமுகவுக்கும் ஸ்டாலினுக்கும் மூன்று வயதுதான் இடைவெளி. திமுகவின் வளர்ச்சியும் கருணாநிதியின் வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று ஒட்டியிருந்ததால், தன் தந்தையோடு ஏனைய தலைவர்களையும், கட்சியின் இயக்கத்தையும் அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பு ஸ்டாலினுக்குக் கிடைத்தது. அரசியல் ஆர்வம் உந்தித் தள்ள பள்ளிப் பருவத்திலேயே நண்பர்களுடன் சேர்ந்து கோபாலபுரம் முடி திருத்தகம் ஒன்றில் 'இளைஞர் திமுக'வைத் தொடங்கினார் ஸ்டாலின். 1968 செப்டம்பர் 30 அன்று தன்னுடைய பதினைந்தாவது வயதில் கோபாலபுரத்தில் ஸ்டாலின் நடத்திய அண்ணா பிறந்த நாள் விழா கூட்டம்தான் ஒருவகையில் அவருடைய அரசியல் பிரவேசம்.



தீவிரமான எம்ஜிஆர் ரசிகர் ஸ்டாலின். எம்ஜிஆர் படங்களுக்கு முதல் நாள் முதல் காட்சிக்குச் சென்றவர். தன்னுடைய முதல் நாடகத்தை ஸ்டாலின் அரங்கேற்றியதும் எம்ஜிஆர் தலைமையில்தான். மகன் படிக்க



வேண்டும் என்று நினைத்தார் கருணாநிதி. நாடகம், கட்சிக்கான பிரச்சாரம் என்று முளைவிட ஆரம்பித்த ஸ்டாலினுக்கு எம்ஜிஆர் மூலம் நாடக மேடையிலேயே அறிவுரை சொல்ல வைத்தார். ஸ்டாலினோ அரசியலை நோக்கி நாடகம், சினிமா, பத்திரிகை என்று நகர ஆரம்பித்தார். பி.ஏ. அரசியல் படித்தவர் 'முரசே முழங்கு', 'வெற்றி நமதே', 'திண்டுக்கல் தீர்ப்பு' என்று முதலில் பிரச்சார நாடகங்களில் நடித்தார். நா.பார்த்தசாரதியின் நாவலான 'குறிஞ்சி மலர்' தூர்தர்ஷனில் தொடர் நாடகமாக வந்தபோது, அதன் நாயகன் ஆனார். 'மக்கள் ஆணையிட்டால்', 'ஒரே ரத்தம்' ஆகிய படங்களிலும் நடித்தார். பிற்காலத்தில் 'இளைய சூரியன்' என்று ஒரு பத்திரிகையும் நடத்தினார். செயல் எதுவாயினும் ஸ்டாலினுக்கு நோக்கம் அரசியலாகவே இருந்தது.

துர்காவைத் திருமணம் செய்து கொண்டபோது ஸ்டாலினுக்கு வயது 22. எளிமையான விழா. கடும் உடல் நலக்குறைவில் இருந்தபோதும் திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்தினார் காமராஜர். நெருக்கடிநிலைத் தாக்குதலின் ஒரு பகுதியாக, அதுவரை தீவிர அரசியலில் இல்லாத ஸ்டாலினையும் திடீரென்று கைதுசெய்தது இந்திரா அரசு. முதல் நாள் வரை முதல்வரின் மகன். திருமணமாகி ஆறு மாதங்கள்கூட ஆகியிருக்கவில்லை. உதயநிதியை

வயிற்றில் சுமந்துகொண்டிருந்தார் துர்கா. சிறையில் அடி, உதை, ரத்தம், வலி, அவமானம் எல்லாவற்றையும் சுமந்தார் ஸ்டாலின். திமுக, தமிழக அரசியல் இரண்டிலும் ஸ்டாலினுக்கான இடத்தையும் அதுவே அமைத்துக்கொடுத்தது.

தனக்கு நிபுணத்துவம் இல்லாத துறைகளில் மூக்கு நுழைக்கக் கூடாது என்றும் நினைப்பார். ‘கருணாநிதி புகழஞ்சலி’ கூட்டம் ஓர் உதாரணம். பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், திரைக்கலைஞர்கள் என்று பல தரப்பினருக்கும் திமுக தனித்தனியே நடத்திய இந்நிகழ்ச்சிகளில் அரசியல் மேடை நீங்கலாக ஏனைய எந்த மேடையிலும் அவர் ஏறவில்லை. பத்திரிகை விமர்சனங்களுக்கும் பெரிய முக்கியத்துவம் அளிப்பார். எதையும் நிதானமாக அணுகுவது ஸ்டாலினின் பாணி!

தன் வாழ்வில் மறக்க முடியாத மூவர் என்று ஸ்டாலின் குறிப்பிடும் கட்சி முன்னோடியினர் மூவர். சிட்டிபாபு, சுப்பு, உசேன். “சிறையில் என் மீது விழுந்த அடியையெல்லாம் சிட்டிபாபு தன் உடலில் வாங்கிக்கொண்டார். அவர் மட்டும் தடுத்திருக்காவிட்டால், நான் இன்று இல்லை” என்று பல முறை கூறியிருக்கிறார் ஸ்டாலின். சிறையில் ஸ்டாலினைப் பல முறை பாதுகாத்தவர் சிட்டிபாபு. ஸ்டாலினை இளைஞரணிச் செயலாளராக நியமிக்க அழுத்தம் கொடுத்தவர் சுப்பு. நெருக்கடிநிலையின்போது சிறை சென்றவர்களுக் கெல்லாம் 1976, 1980 தேர்தல்களில் வாய்ப் பளித்த கருணாநிதி, ஸ்டாலினுக்கு இடம் அளிக்கவில்லை. 1984 தேர்தலில் ஆயிரம்விளக்குத் தொகுதி வேட்பாளராக அவரை அறிவிக்கச் சொல்லி தீர்மானம்போட்டுக் கொடுத் தவர் அத்தொகுதியின் செயலரான உசேன்.



சென்னை 75-வது வட்ட திமுக உறுப்பினராகப் பதிவு செய்துகொண்ட ஸ்டாலின், வட்டப்பிரதிநிதி, பகுதி பிரதிநிதி, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், இளைஞரணிச் செயலாளர், திமுக துணைப் பொதுச் செயலாளர், பொருளாளர், செயல் தலைவர் என்று தலைமைப் பொறுப்புக்கு வர 51 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 1987, 1996, 2001, 2006, 2011, 2016 என்று இதுவரை ஆறுமுறை சட்ட மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார் ஸ்டாலின். 2006-ல்தான் அமைச்சராகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. சட்ட மன்ற உறுப்பினராக, மேயராக, அமைச்சராக என்று இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளில் எல்லாம் முத்திரை பதித்திருக்கிறார் ஸ்டாலின். செயல்திறன் மிக்க அதிகாரிகளை அருகில் வைத்துக்கொண்டு காரியங்களைத் துரிதமாகச் செய்வது ஸ்டாலின் பாணி.



பரபரப்பான அரசியல் பணிகளுக்கு இடையே ஸ்டாலின் தேடும் ஒரே ஆறுதல் இசை. எம்ஜிஆர், சிவாஜி சினிமா பாடல்கள் அடிக்கடி கேட்பார். பாடகர்களில் பிடித்தவர் நாகூர் ஹனிபா. வீட்டில் பாடும் பழக்கம் ஸ்டாலினுக்கு உண்டு. மகள் செந்தாமரையின் திருமணத்தின்போது மேடையிலேயே பாடினார். முகநூல், டுவிட்டர் போலவே வாட்ஸ்அப்பையும் பயன்படுத்துகிறார் ஸ்டாலின். திமுக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கென ஒரு வாட்ஸ்அப் குழு தொடங்கி, உறுப்பினர்களின் நல்ல செயல்களைப் பதிவேற்றச் சொல்லிப் பாராட்டுவது அவரது பழக்கம்.

திமுக தலைவராகக் கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் பல காரியங்களை ஆற்ற வேண்டிய பொறுப்பு ஸ்டாலின் முன் நிற்கிறது. கட்சிக்குள் புதிய தலைமுறைத் தலைவர்களை உருவாக்குவது, காலத்துக்கேற்ப கட்சியைத் தகவமைப்பது போன்ற சவால்கள் கட்சி சார்ந்தவை. ஜெயலலிதா, கருணாநிதி மறைவுக்குப் பின் ஒரு வலிய தலைவரை எதிர்நோக்கியிருக்கும் தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப எல்லோருக்குமான தலைவராக தன்னை வளர்த்தெடுத்துக்கொள்வது மாநிலம் சார்ந்தும் சுயம் சார்ந்தும் அவர் முன்னிற்கும் பெரும் சவால்கள்.

**- V.சிவசங்கரன்**

# சாகாக் கலை எனப்படும்

தமிழ் மருத்துவமான சித்த மருத்துவத்தில் காய கற்ப மருந்துகள் சிறப்பானதாகும்.

காயகற்பம் = காயம் + கற்பம். காயம் என்றால் உடல். கற்பம் என்றால் உடலை நோயணுகாதபடி வலுவடையச் செய்யும் மருந்து. நரை, திரை, மூப்பு, பிணிநீக்கி, வயதுக்கு தகுந்தவாறு ஏற்படும் நோய்களிலிருந்து விடுபடவைத்து நீண்டநாள் வாழச் செய்வது கற்பமாகும்.

இந்த கற்பமானது உடம்பை கல்போல் ஆக்கும். கல்லினால் செதுக்கப்பட்ட சிலைஎப்படி பன்னெடுங் காலமாக அப்படியே உள்ளதோ அதுபோல் நரை, திரை, மூப்புபிணிகளை நீக்கினால் உடலும் கல்போல் ஆகும்.

சித்தர்கள் உடலை கற்பமாக்க கற்ப மூலிகைகளை கண்டறிந்து கூறியுள்ளனர். மூலிகையில் உள்ள தாதுப் பொருட்களை தனியாகவோ அல்லது பல மூலிகைகள் கலந்தோ அல்லது உலோக உபரச உப்பு பொருட்களை சேர்த்தோ நன்கு பக்குவப்படுத்தி பத்தியம் மேற்கொண்டு ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் பிணியில்லா பெருவாழ்வு வாழலாம் உடலை கற்பமாக்கும் இம் மூலிகைகள்தான் கற்ப மூலிகைகள்.

அதுபோல் இந்த கற்ப மருந்தை சாப்பிடும் காலத்தில் தூய்மையான மனதுடன் இருக்க வேண்டும். தெய்வ சிந்தனை வேண்டும். மனம் தூய்மையானால் கற்ப மருந்துசிறந்த பலனைத் தரும் என்பதில் ஐயமில்லை. பொதுவாக கற்ப மருந்தை நல்ல நாள்பார்த்து சாப்பிட வேண்டும். ஆரம்பத்தில் சிறியதாக உட் கொள்ளும் மருந்தைநாட் செல்லச் செல்ல அதிகரிக்க வேண்டும். ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள்சாப்பிட வேண்டும்.

இக்காலங்களில் புளியை நீக்குவது நல்லது. மேலும் அகப் பத்தியம் என்று அழைக்கப்படும் ஆண் பெண் சேர்க்கையை தவிர்க்க வேண்டும். மது, புகை, போதைப்பொருட்களை அறவே தொடக் கூடாது.

இப்படிப்பட்ட மூலிகைளின் மருத்துவக் குணங்கள் பற்றி ஒவ்வொரு இதழிலும்அறிந்து வருகிறோம். இந்த இதழில் கற்ப மூலிகைகளில் சிறந்ததான தூதுவளை, வில்வம் பற்றி தெரிந்து கொள்வோம்.

தூதுவளை இந்தியாவில் அனைத்து இடங்களிலும் பயிராகும் கற்ப மூலிகைகளில்இதுவும் ஒன்று. இதற்கு தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள்உண்டு. இந்தியா முழுவதும்தோட்ட வேலிகளில் வளரும் ஒருவகை கொடியாகும். சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும்மருத்துவப் பயன் கொண்டது.



**தூதுவே ளையையுணத்**
**தொக்கினிற் றொக்கிய**
**வேதையா நொயெலா**
**மெய்யைவிட் டகலுமே**

(தேரையர் காண்டம்)

**தூதுவளைக் கற்பம்:**

தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து ஒரு மண்டலம்சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளிமுதலியவை நீங்கும்.

# காயகல்பம்

## வள்ளலார் அருளிய கல்ப மருந்து

தூதுவளைக் கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் ஆண்மை சக்தியையும் அதிகரிக்கும்.

தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும், பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளை கீரையை பருப்புடன் சேர்த்து சமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.

வாத, பித்தத்தால் ஏற்படும் நோய்களை குணப்படுத்த மிளகு கற்பம் 48 நாட்கள் சாப்பிட்ட பின், தூதுவளைக் கீரை சமையல் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வாத,பித்த நோய் தீரும்.

தூதுவளையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக்கொண்டு காலை, மாலை என இருவேளையும் தேனில் கலந்து கற்ப முறையாக பத்தியம் கொண்டு ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும். தாதுவை பலப்படுத்தும்.

தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். இந்திரியம் அதிகமாகி ஆண்மையைக் கூட்டும்.

காது மந்தம், இருமல், நமைச்சல் பெருவயிறு மந்தம் போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்தாகும்.





மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர் சுரப்பு, பல் ஈறுகளில் நீர் சுரத்தல், சூலை நீர், போன்ற வற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்து.

தூதுவளை காயை சமைத்தோ, அல்லது வற்றல், ஊறுகாய் செய்து ஒருமண்டலம் கற்ப முறைப்படி உண்டு வந்தால் கண்ணில் உண்டான பித்த நீர் அதிகரிப்பு, கண் நோய் நீங்கும்.

தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கி பாலில் கலந்து அருந்தி வந்தால் ஆண்மையைப் பெருக்கி உடலுக்கு வலு கொடுக்கும்.

தூதுவளை பழத்தை வெயிலில் காயவைத்து பொடியாக்கி தேன் கலந்து சாப்பிட்டால் மார்புச்சளி, இருமல், முக்குற்றங்கள் நீங்கும். பாம்பின் விஷத்தை முறிக்கும். நாளுக்கு இருமுறை மலத்தை வெளியேற்றும்.

தூதுவளைக் கீரை, வேர், காய், இவற்றை வற்றல், ஊறுகாய் செய்து நாற்பது நாட்கள் சாப்பிட்டு வந்தால் கண்ணெரிச்சல் கண் நோய்கள் நீங்கும்.

தூதுவளை இலையை குடிநீர் செய்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் அணுகாது.

மேற்கண்ட கற்ப முறைப்படி தூதுவளையை உண்டு வந்தால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

**தொடரும்**

- Dr. K. ராஜமாணிக்கம்



# சிந்தனை முத்துக்கள்






## அவ்ளோதாங்க வாழ்க்கை

கல்யாணம் ஆன பின், ஒன்னு அடி விழும்! இல்ல முடி விழும்!! அவ்ளோதாங்க வாழ்க்கை.

இந்த உலகத்துல நல்லவங்க கெட்டவங்கனு யாரும் இல்ல.
நமக்கு புடிச்சா நல்லவங்க!
புடிக்கலனா கெட்டவங்க!!




## பார்த்து பேசு

மனம் திறந்து பேசு
- ஆனால் மனதில்
பட்டதையெல்லாம்
பேசாதே!
சிலர் புரிந்து
கொள்வார்கள்!
சிலர் பிரிந்து
செல்வார்கள்!!










பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
'அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்' எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
'அனுபவம் என்பதே நான்தான்' என்றான்

- கவியரசு கண்ணதாசன்
(கண்ணதாசன் கவிதைகள்)






**நாம் விட வேண்டிய முதல் தீய குணம்:**
**நான் தான் என்ற அகம்பாவம்.**

"அ" வுக்கு அடுத்து "ஆ" வருவதேன்?
அரசனும் ஆண்டியாகலாம் என்பதை அறிந்திட.
"இ" வுக்கு அடுத்து "ஈ" வருவதேன்?
இருப்பவன் ஈய வேண்டும் என இயம்பிட.
"உ" வுக்கு அடுத்து "ஊ" வருவதேன்?
உழைப்பே ஊக்கம் என உணர்த்திட.
"எ" வுக்கு அடுத்து "ஏ" வருவதேன்?
எதையும் ஏன் என்று சிந்தித்து பார்க்க.
"ஐ" மட்டும் ஏதோடும் சேராமல் தனித்து இருப்பதேன்?
அதற்கு நான் (i) என்ற அகம்பாவம் அதிகம் உண்டு.
"ஒ" வுக்கு அடுத்து "ஓ" வருவதேன்?
ஒற்றுமையே ஓங்கும் என்பதை உணர்த்திட.






# பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்:

## -அன்புமணி ராமதாஸ்

நிலத்துக்கு அடியில் உள்ள எரிபொருட்களை எடுப்பதற்குக் கடந்த 1998-லிருந்து பின்பற்றப்பட்டு வந்த துரப்பணக் கொள்கையை 2016-ல் மத்திய அரசு மாற்றியமைத்தது. கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, மீத்தேன், ஷேல் எண்ணெய் எரிவாயு என்று வெவ்வேறான எரிபொருட்களுக்கு ஹைட்ரோகார்பன் என ஒரே பெயரிட்டு, அதற்காக 'ஹெல்ப்' கொள்கையை (Hydrocarbon Exploration Licensing Policy) அரசு அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் ஒருமுறை உரிமம் பெற்றால் போதும் நிலத்துக்குள் எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் எனும் நிலை உருவானது.

இதையடுத்து, ஹைட்ரோகார்பன் எடுக்க தனியார் நிறுவனங்கள் பெருமளவில் அனுமதிக்கப்பட்டன. இந்தியா முழுவதும் கைவிடப்பட்ட எண்ணெய் வயல்களுக்கு (டிஎஸ்எஃப்) நெடுவாசல் உட்பட 34 வட்டாரங்களில் அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் எதிர்ப்பால் தமிழகத்தில் இத்திட்டம் நிறைவேறவில்லை. ஆனால், விஷயம் இத்துடன் முடிந்துவிடவில்லை.

'திறந்தவெளி அனுமதி' என்ற பெயரில் தமிழகத்தில் மூன்று வட்டாரங்கள் உட்பட நாடு முழுவதும் 55 புதிய வட்டாரங்களில் எண்ணெய் எடுக்க அனுமதி வழங்கப்படவிருக்கிறது இதுவரை என்இஎல்பி கொள்கையின் கீழ் பணிகள் நடைபெற்றுவரும் எண்ணெய்க் கிணறுகளையும் 'ஹெல்ப்' கொள்கையின்கீழ் மாற்றி ஆகஸ்ட் 1-ல் முடிவெடுக்கப்பட்டது.

மன்னார்குடியை மையப்படுத்தி நிலத்துக்கு அடியில் சுமார் 697 சதுர கி.மீ. பரப்பளவில் நிலக்கரிப் படிமங்களின் மேல் அடுக்குகளில் படர்ந்துள்ள மீத்தேன் வாயுவை வெளிக்கொணருவதுதான் மீத்தேன் திட்டம். அதற்கு சுமார் 450 அடி முதல் 1,500 அடி ஆழத்தில் உள்ள நிலத்தடி நீரை வெளியேற்றி மீத்தேன் வாயுவை எடுக்க

வேண்டும். கீழடுக்குகளில் உள்ள கடின நீரை வெளியேற்றினால், தற்போது குடிநீருக்கும் விவசாயத்துக்கும் பயன்பட்டு

வருகின்ற மேல் அடுக்கு நீரும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இதனை உணர்ந்துதான் மீத்தேன் திட்டத்துக்குச் சுற்றுச்சூழல் அனுமதி பெற்றுவந்த ஜிஇஇசிஎல் நிறுவனத்தையே பணி செய்ய விடாமல் தமிழக அரசே நிரந்தரத் தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மீத்தேன் திட்ட கருத்துக்கேட்புக் கூட்டம் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **2012**-ல் நடந்தபோது, மீத்தேன் எடுப்பதால் நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழலில் எந்த மாதிரியான தாக்கம் ஏற்படும் என்பது குறித்த அடிப்படை சந்தேகங்களுக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தாலும், உரிமம் பெற்றிருந்த ஜிஇஇசிஎல் நிறுவனத்தினராலும் வெளிப்படையாகப் பதில் கூற இயலவில்லை. அதனால்தான், இந்தத் திட்டம் காவிரிப் படுகை விவசாயத்தை அழித்துவிடும் திட்டம் என்ற புரிதலை அனைத்துத் தரப்பினரிடமும் ஏற்படுத்தியது.

இந்தத் திட்டத்தை எந்த வழியிலாவது செயல்படுத்திவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் ஓஎன்ஜிசி போன்ற பொதுத்துறை நிறுவனங்கள், ஏற்கெனவே அமைத்துள்ள எண்ணெய்க் கிணறுகள் தொடர்பான அன்றாடப் பராமரிப்புப் பணிகளை செய்வதைக்கூட மக்கள் சந்தேகத்துடனே பார்க்கிறார்கள். தற்போது பழைய துரப்பணக் கிணறுகளையும் புதிய ‘ஹெல்ப்’ கொள்கையின் கீழ் மாற்றி அமைத்து, நிலத்துக்கு அடியில் எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை மத்திய அரசே உருவாக்கியிருப்பது பிரச்சினையை அதிகரித்திருக்கிறது.

ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் இந்தத் திட்டத்துக்குத் தடை உள்ளது. அமெரிக்கா, கனடாவின் பல மாகாணங்களும் இத்திட்டத்தைத் தடைசெய்திருக்கின்றன. இந்தத் திட்டம் நடைமுறையில் உள்ள நாடுகளிலும்கூட குடியிருப்புப் பகுதிகள், விவசாய நிலங்கள் அருகில் ஷேல் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. நீரியல் விரிசல் (Hydro Fracking) ஏற்படுத்தும் பாதிப்பே இதற்கு முக்கியக் காரணம் என்கிறார்கள். ஷேல் எண்ணெய், எரிவாயு எடுப்பதற்காக ஒரு முறை நீரியல் விரிசல் செய்ய **15** முதல் **20** கோடி லிட்டர் நன்னீர் தேவைப்படும். சில கிணறுகளுக்குப் பல முறை நீரியல் விரிசல் செய்ய வேண்டியிருக்கும்.

“இந்தியாவில் ஏற்கெனவே கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இருந்துவரும் சூழலில் நன்னீரைப் பாதிக்கும் ஷேல் திட்டங்கள் குறித்த கொள்கை முடிவுகளை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். காவிரிப் படுகையில் தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக விவசாயம் பொய்த்துவருகிறது. குடிநீருக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தச் சூழலில், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதுடன், இருக்கும் தண்ணீரையும் நீரியல் விரிசல் முறைக்குப் பயன்படுத்துவது ஒட்டுமொத்த நீராதாரத்தையே அழித்துவிடும்” என்று எச்சரிக்கிறார் தமிழ்நாடு அறிவியல் இயக்கக் கருத்தாளர் வ.சேதுராமன்.

தமிழக அரசு உடனடியாக சட்ட மன்றத்தைக் கூட்டி, காவிரிப் படுகை மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரியிருக்கும் பாமக இளைஞரணித் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், “தமிழகக் காவிரிப் படுகையில் ஓஎன்ஜிசி, கெயில் நிறுவனங்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்துள்ள நிலங்களுக்கான குத்தகை உரிமையை ரத்துசெய்து அந்நிறுவனங்களை வெளியேற்ற வேண்டும்” என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். காவிரிப் படுகையை ஆபத்தான சூழலுக்குத் தள்ளுவது தமிழ்நாட்டையே குட்டிச்சுவராக்கிவிடும்!

- R.ஜெயா

# ரஃபேல்: வெற்றிபெறாத உண்மைகள்...

பிரான்ஸிடமிருந்து 36 'ரஃபேல்' போர் விமானங்களை வாங்கும் விவகாரத்தில் மோடி அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கின்றன எதிர்க்கட்சிகள். இரண்டு குற்றச்சாட்டுகள் பிரதானமாக முன்வைக்கப்படுகின்றன: "விமானங்களுக்கு அதீத விலை கொடுக்கப்படுகிறது. ஆளும் கட்சிக்கு வேண்டிய 'ரிலையன்ஸ்' நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தைத் தருமாறு சலுகை காட்டப்பட்டிருக்கிறது."

"விலை விஷயம் ராணுவ ரகசியம்" என்று மோடி அரசு கூறுவதும், இந்த ஒப்பந்தத்தில் பிரான்ஸ் சார்பில் கையெழுத்திட்டவரான அன்றைய அதிபர் ஒல்லாந், "தொழிலதிபர் அனில் அம்பானிக்குச் சொந்தமான 'ரிலையன்ஸ் டிஃபென்ஸ் லிமிடெட்' நிறுவனத்தை, தயாரிப்பில் இந்தியத் தொழில் கூட்டாளியாகச் சேர்க்க வேண்டும் என்று இந்திய அரசு தரப்பில் கூறப்பட்டது" என்று பேட்டியளித்ததும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வலு சேர்க்கின்றன. இந்திய அரசு, பிரான்ஸ் அரசு, தஸ்ஸோ நிறுவனம் ஆகியவை குற்றச்சாட்டுகள் தொடர்பில் விளக்கம் அளித்துள்ளன என்றாலும், இதுவரையிலான விளக்கங்கள் எதுவுமே குற்றச்சாட்டுகளைத் தகர்க்கும் வகையில் இல்லை.




முக்கியமான கேள்விகள் என்னவென்றால், ஒல்லாந் கூறியதைப் போல ரிலையன்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து தயாரியுங்கள் என்று இந்திய அரசு கோடி காட்டியதா? உண்மையென்றால், எந்தவிதத்தில் அது கூறப்பட்டது? அதைக் கூறியவர் யார்? ஒல்லாந் முழுமையாக விவரங்களை வெளியிடவில்லை. ஆகையால், இதுகுறித்துப் பேச வேண்டிய, நாட்டு மக்களுக்கு பதில் அளிக்க வேண்டிய கடமை இந்தியப் பிரதமருக்கே இருக்கிறது.

ரஃபேல் போர் விமானத்தின் தாக்கும் திறன் குறித்து யாரும் சந்தேகம் எழுப்பவில்லை. போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் கூறப்பட்டதைப் போல, இத்தனை கோடி ரூபாய் இன்ன கணக்கில் போடப்பட்டிருக்கிறது என்றும் யாரும் கூறிவிடவில்லை. இந்த பேரம் எந்த முறையில் நடத்தப்பட்டது என்பதைச் சுற்றித்தான் சந்தேகங்களும் குற்றச்சாட்டுகளும். 2015 ஏப்ரலில் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, தன்னுடைய பயணம் தலைப்புச் செய்தியாக வேண்டும் என்பதற்காக 36 விமானக் கொள்முதல் குறித்துத் திடீரென அறிவித்தபோது அரசின் மூத்த அதிகாரிகளைக்கூட அந்த அறிவிப்பு வியப்பில் ஆழ்த்தியது. காரணம் அவர்கள் காங்கிரஸ் கூட்டணி அரசு காலத்தில் தொடங்கிய 126 விமானங்களை வாங்குவதற்கான பேரத்தை முடிப்பதற்காகத் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஆக, இந்த ஒப்பந்த உருவாக்கத்தில் வழக்கமான ஒப்பந்தங்களைக் காட்டிலும் கூடுதலான பொறுப்பு மோடிக்கு இருக்கிறது. புதிய அறிவிப்பு இன்று ஏராளமான சந்தேகங்களுக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும் வித்திட்டிருக்கும் நிலையில் இனியும் யாரும் மௌனம் காக்க முடியாது. வெளிப்படையாகப் பேசுவதுதான் ஒரே வழி. ஊழல் நடக்கவில்லை, தவறுகளுக்கு இடமில்லை என்றால், நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிடுவதில் அரசுக்கு என்ன தயக்கம்?

- S.சுப்ரமணியன்

# 16 வயதில் நடந்த பாலியல் தாக்குதல்!

# அமைதி காத்தது ஏன்?




அமெரிக்க உச்ச நீதிமன்ற இணை நீதிபதியாகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் பிரெட் கேவனோவுக்கு எதிராக இரண்டு பெண்கள் குற்றம்சாட்டியிருக்கும் நிலையில், கடந்த சில நாட்களாக அந்தச் சம்பவத்தைப் பற்றித்தான் தொடர்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தேன். பிரெட் கேவனோவுடன் உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவரான கிறிஸ்டின் ப்ளேசி ஃபோர்டு, தனது வாயைப் பொத்தி, தன்னைப் பாலியல் வல்லுறவு செய்ய பிரெட் கேவனோவ் முயன்றதாகக் கூறியிருக்கிறார். கல்லூரியில் படித்தபோது, பிரெட் கேவனோவ் தன் முன்னே ஆடைகளைக் களைந்து நின்றதாக டெப்ரோஹா ராமிரேஸ் எனும் பெண் கூறியிருக்கிறார்.

என் 16-வது வயதில், லாஸ் ஏஞ்சலீஸ் புறநகர்ப் பகுதியில் உள்ள புவென்ட்டே ஹில்ஸ் மாலில் சந்தித்த நபருடன் வெளியில் சுற்றத் தொடங்கினேன். பள்ளி நேரத்துக்குப் பின்னர், அங்கு உள்ள ராபின்ஸன் மே பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்துவந்தேன். அவன் ஒரு உயர் ரக ஆடையகத்தில் பணிபுரிந்தான். சாம்பல் நிற சில்க் சூட் அணிந்து என்னைப் பார்க்கவரும் அவன், என்னிடம் சரசமாகப் பேசுவான். கல்லூரி மாணவன் அவன். அழகானவன், வசீகரமானவன். அப்போது அவனுக்கு வயது 23. நாங்கள் சந்தித்து, சேர்ந்து சுற்றத் தொடங்கி ஆறு மாதங்களே ஆன நிலையில், ஒரு புத்தாண்டு இரவில் அவன் என்னைப் பாலியல் பலாத்காரம் செய்தான்.

கிறிஸ்டின் ப்ளேசி சொல்வது உண்மையென்றால், அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே போலீஸில் புகார் தெரிவித்திருக்கவேண்டும் என்று ட்வீட் செய்திருக்கிறார் அதிபர் ட்ரம்ப். ஆனால், அந்த இரண்டு பெண்களும், போலீஸுக்குச் செல்லாமல் பல ஆண்டுகளாக அந்தத் தகவலைத் தங்களுக்குள்ளேயே வைத்திருந்தது ஏன் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. பல ஆண்டுகளாக நானும் அப்படித்தான் இருந்தேன். பல ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பற்றி சமீபத்தில்தான் ட்வீட் செய்திருந்தேன்.

நான் பாலியல் வல்லுறவுக்கு ஆளான இரவில் நான் மது அருந்தியிருந்திருப்பேன் என்று நீங்கள் நினைக்கலாம். அது ஒரு பொருட்டில்லை. ஆனால், நான் குடித்திருக்கவில்லை. நான் என்ன உடை அணிந்திருந்தேன் என்பதையோ, தெளிவில்லாத அபிலாஷைகளுடன் இருந்தேனா என்பதை யோகூட நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பலாம். ஆனால், அதுவும் விஷயமில்லை. நான் அன்று நீளமான கைவைத்த கறுப்பு நிற மேக்ஸி அணிந்திருந்தேன். எனது தோள்கள் மட்டும்தான் வெளியில் தெரிந்தன.

அன்று இருவரும் சில விருந்துகளில் கலந்துகொண்டோம். அதன் பிறகு, அவனது வீட்டுக்குச் சென்றோம். பின்னர் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது. மிகவும் களைப்பாக இருந்ததால்,

படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்டேன். அதன் பிறகு, என் கால்களுக்கு இடையில் கத்தியால் குத்தப்படுவதுபோல் உணர்ந்து நான் விழித்துக் கொண்டது நினைவிருக்கிறது. அவன் என் மீது படுத்திருந்தான்.

நான் அதை யாரிடமும் சொல்லவில்லை. என் தாயிடம், நண்பர்களிடம், குறிப்பாக போலீஸிடம் நான் சொல்லவில்லை. முதலில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அன்று மாலை, நான் எப்போது வீட்டுக்கு வந்தேன் என்பதை என் தாயிடம் சொல்லிவிட்டு தூங்கிவிட்டேன். அந்த இரவை மறக்க முடியும் என்ற நம்பிக்கை யுடன். தவறு என்னுடையதுதான் என்பதை விரைவில் உணரத் தொடங்கினேன். 1980-களில், 'டேட்டிங்' பாலியல் வல்லுறவு தொடர்பாகப் பெரிய அளவில் விழிப்புணர்வு இல்லை. பெரியவர்கள் என்ன சொல்வார்களோ என்று பயந்தேன்: "அவன் வீட்டில் என்ன இழவு செய்துகொண்டிருந்தாய்? உன்னைவிட அதிக வயதான ஒருவனுடன் ஏன் சுற்றினாய்?"

அதை ஒரு பாலியல் வல்லுறவா அல்லது பாலியல் உறவுதானா என்றோகூட என்னால் பகுத்துப் பார்க்க முடியவில்லை. கட்டுப்பா டில்லாமல் நடந்த அந்த விஷயம் குழப்பமாக இருந்தது. ஒருநாள் நான் உடலுறவு கொள்வேன் என்றால் அது காதலை வெளிப்படுத்தும் உறவாக இருக்கும், இன்பத்தைப் பகிர்ந்துகொள்வதாக இருக்கும் அல்லது குழந்தை பெற்றுக்கொள்வ தற்கானதாக இருக்கும் என்பதுதான் என் மனதில் இருந்தது. ஆனால், அந்தச் சம்பவம் அப்படியானதாக இல்லை.

அந்தச் சம்பவத்துக்கு முன்னதாகவே நான் சில பாடங்களைக் கற்றுக்கொண்டுவிட்டேன் என்பதை, இன்று நினைத்துப் பார்க்கும்போது என்னால் உணர முடிகிறது. நான் ஏழு வயது சிறுமியாக இருந்தபோது என் வளர்ப்புத் தந்தையின் உறவினர் என் கால்களுக்கு இடையில் தொட்டார். தனது ஆண் குறியின் மீது எனது கையை வைத்தார். அதை என் தாயிடமும் வளர்ப்புத் தந்தையிடமும் சொன்னேன். சில நாட்களிலேயே அவர்கள் இந்தியாவுக்கு எனது தாத்தா, பாட்டியுடன் வசிக்க அனுப்பிவிட்டனர். கற்றுக்கொண்ட பாடம்: 'வாயைத் திறந்தால், நீ ஒதுக்கிவைக்கப்படுவாய்!' இந்த அனுபவங்கள் என்னையும், எனது நம்பிக்கை கொள்ளும் திறனையும் பாதித்தன. என்னுடன் அன்னியோன் யமாகப் பழகிய சிலரிடமும், ஒரு மனநல ஆலோசகரிடமும் அதைப் பற்றிப் பேச எனக்குப் பல ஆண்டுகள் பிடித்தன.

ஒரு ஆண் தனது பதின்மவயதில் செய்த செயல்களுக்கு எந்த விலையும் கொடுக்க வேண்டி யதில்லை என்பார்கள். ஆனால், பெண், தனது வாழ்நாள் முழுவதும் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது - அவளை நேசிப்பவர்களும்தான்!



இன்றைக்கு எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு 8 வயது. புரிந்து கொள்வதற்கு எனக்கு மிக நீண்ட காலம் பிடித்த, எளிதான ஒரு விஷயத்தை அவளுக்குத் தொடர்ந்து சொல்லிவருகிறேன்: "உனது அந்தரங்க உறுப்புகளில் யாரேனும் தொட்டாலோ உன்னை அசௌகரியமாக உணரவைத்தாலோ உரக்கக் கத்து. அந்த இடத்தைவிட்டு வெளியேறி யாரிடமாவது அதைச் சொல். உன் மீது கைவைக்க யாருக்கும் அனுமதி இல்லை. உன் உடல் உன்னுடையது மட்டும்தான்!"

18 வயது நிறைவதற்கு முன்னர், நான்கில் ஒரு பெண்ணும் ஆறில் ஒரு பையனும் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள். நமது மகள்கள் ஒருபோதும் அச்சத்தையும் அவமானத்தையும் உணராத வகையில், பெண்களின் உடல்கள் தங்கள் இச்சைக்கானவை அல்ல என்பதையும், பாலியல் துன்புறுத்தல்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துபவை என்பதையும் நமது மகன்கள் புரிந்துகொள்ளும் வகையில், நாம் அனைவரும் போராட வேண்டும். அதற்காகத்தான் நான் இப்போது பேசுகிறேன். நம் தேசத்தின் உச்ச நீதிமன்றத்தில், முடிவுகளை எடுக்கும் ஒரு பதவிக்கு யாரை நியமிக்கிறோம் என்பதைத் தெளிவாகத் தீர்மானிக்கும் வகையில் அந்த சேதிகள் இருக்க வேண்டும்!

- K.ரமேஷ் குமார்

- கவிஞர் நிவேதிதா

உப்பு போன்ற கடினமான வார்த்தைகளால்
நம்மை திருத்துபவன்
உண்மையான நண்பன்....
சர்க்கரை போன்ற இனிப்பான
வார்த்தைகளால்
நம்மை புகழ்பவன் நயவஞ்சகன்.

புழுவுற்ற உப்பும் புழுவுறாத இனிப்பும்
இவ்வுலகில் உள்ளதாக இதுவரை
வரலாறு இல்லை.

இங்கு கோயில்கள், மசூதிகள்,
திருத்தலங்கள் வேடிக்கையானவை..
பணக்காரன் உள்ளே சென்று
பிச்சை எடுக்கிறான்,
ஏழை வெளியில் நின்று
பிச்சை எடுக்கிறான்....
ஆக ஏதோ ஒரு வகையில் அனைவரும் பிச்சை
எடுப்பவர்களே.

காணாத கடவுளுக்கு
பஞ்சாமிர்தம் படைப்பார்கள்,
கண்கண்ட கடவுளுக்கு (தாய்தந்தை)
பழைய சோறும், கிழிந்த துணியும்
கொடுப்பார்கள்.
மனிதப் பிறவி சிறப்பானதாகத் தெரியவில்லை,

ஏனெனில் பிறக்கும்போதும் அழுகை,
சாகும்போதும் அழுகை,
இடையில் எல்லாம் நாடகம்.....

தீங்கு விளைவிக்கும் மது விற்கும்
இடத்திற்கு ஓடோடி போவான்,
அமுதமாம் பால் விற்பவர்
வீடு வீடாக தெருத் தெருவாக
வெயிலில் சுற்றுகிறார்.
பால்காரரைப் பார்த்தால் பாலில் தண்ணீர்
ஊற்றுகிறார் என்று சண்டையிடுவார்கள்,....

தண்ணீரில் நஞ்சுகளை கலந்து விற்கும்
பானங்களை தலைமீது வைத்து
கொண்டாடுகிறார்கள்.

மனிதனின் பிணத்தை தொட்டால் அல்லது
பார்த்தாலே தீட்டு எனக் குளிக்கும் மனிதன்,
வாயில்லா ஜீவன்களை பிணமாக்கி
வகைவகையாச் சமைத்து விழா எடுப்பார்கள்.
இவ்வளவு தான் மனிதனின் வாழ்க்கை.


இதற்குள் எதற்கு
உறவுகளுக்குள்
கோபம்,
விரோதம்,
வீண்பழி,
கௌரவம்,
அஹங்காரம்,
அதிகாரம்,
ஆணவம்,
கொலை,
கொள்ளை,
காழ்ப்புணர்ச்சி?

எது நமதோ அது வந்தே தீரும்.
யாராலும் தடுக்கமுடியாது.
நமதில்லாதது...
நமக்கில்லாதது...
எது செய்தாலும் வராது.
யாராலும் தரவும் முடியாது.
வாழும் வரை வாழ்க்கை...
வாழ்ந்து காட்டுவோம்..

பழக்கத்திற்கு இனியவராக,
மற்றவர்களின் இதயத்தில்...



# தமிழ்த் திரைப்படங்களுக்கும்




தமிழ்த் திரைப்படங்களுக்கென ஓர் ஆவணக்காப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக் கப்பட்டு வருகிறது. திரைத் துறையினரில் மிகச் சிலர், திரைப்படச் செயல்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் எனச் சிறிய குழுவினரால் தொடர்ந்து எழுப்பப்படும் இந்தக் கோரிக் கையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை!

இயக்குநர் பாலு மகேந்திரா, தனது திரைப் படங்களிலேயே 'வீடு', 'சந்தியாராகம்' ஆகிய இரண்டு படங்கள்தான் ஓர் படைப்பாளி எனும் வகையில் தனக்கு நிறைவைத் தந்ததாகக் கூறியிருக்கிறார். ஆனால், அவ்விரு படங்களின் படச்சுருள்களை நீண்ட நாட்கள் கழித்து எடுத்துப் பார்க்கையில், அவை சருகுகளைப் போல் உதிர்ந்து கிடந்ததைக் கண்டு பெருந்துயருக்கு ஆளானதைப் பதிவுசெய்திருக்கிறார். அதன் வெளிப்பாடாக ஆவணக்காப்பகத்துக்கான கோரிக்கையை அவர் தன் வாழ்நாளின் இறுதி வரையிலும் முன்வைத்துக் கொண்டே இருந்தார்.

மேற்கத்திய நாடுகளில்தான் 'ஃபிலிம் நெகடிவ்கள்' தயாரிக்கப் பட்டன. அங்குள்ள குளிர்ந்த தட்ப வெப்பநிலை மற்றும் காற்றின் ஈரப்பதத்துக்கு ஏற்றார்போல அவை வடிவமைக்கப்பட்டன. இந்தியா போன்ற வெப்ப மண்டல நாடுகளுக்கு அவை ஏற்புடையதாக இல்லை. காற்றின் ஈரப்பதம் அதிகமாகும்போது, ஃபிலிமால் அதைக் கிரகித்துக் கொள்ள முடியாது. ஃபிலிம் நெகட்டிவின் மூலப்பொருட்களான சில்வர் நைட்ரேட்டும், அமோனியமும் வேதி வினைபுரிந்து, ஃபிலிமை சீர்குலைத்துவிடும். இதுகுறித்த தெளிவின் மையால் நாம் பல நூறு திரைப்படங்களை இழந்திருக்கிறோம்.

தென்னிந்தியாவின் முதல் மௌனப் படமான 'கீசகவதம்' (1916), தமிழ்-தெலுங்கு மொழிகளின் முதல் பேசும்படமான 'காளிதாஸ்' (1931) போன்ற முன்னோடித் திரைப்பட முயற்சிகளின் பிரதிகள் நமக்குக் கிடைக்கவில்லை. 1931 - 1950 வரையிலும் வெளிவந்த பல தமிழ்த் திரைப்ப டங்களின் பிரதிகள் ஒன்றுகூட இல்லாமல் அழிந்துபோய்விட்டன. மலேசியாவில் உள்ள 'கொலம்பியா பிக்சர்ஸ்' எனும் திரைப்பட விநியோக நிறுவனம், தான் விநியோகித்த படங்களின் பிரதிகளைப் பாதுகாத்து வைத்திருந்தது. இன்றைக்கு நாம் காண்கிற கருப்பு-வெள்ளைத் திரைப்படங்களில் பெரும் பாலானவை அந்நிறுவனத்தின் மூலம் நமக்குக் கிடைத்தவைதான்.

1935-ல் வெளிவந்த 'பட்டினத்தார்' திரைப்படத்தின் பிரதி அந்நிறுவ னத்திடமிருந்துதான் கிடைத்தது. 1950 வரையிலும் குளிரூட்டப்பட்ட 'லேப்' வசதி சென்னையில் இல்லை. அதன் பிறகுகூட ஏவி.எம், பிரசாத் போன்ற பெரிய திரைப்பட நிறுவனங் களால் மட்டுமே லேப் அமைத்துத் தங்களது படங்களைப் பாதுகாக்க முடிந்தது. சிறிய நிறுவனங்களுக்கு அது சாத்தியமாகவில்லை என்பதைவிட, அதற்கான தேவையை யாரும் உணரவில்லை என்பதுதான் இங்கு குறிப்பிட

# ஓர் ஆவணக்காப்பகம் வேண்டும்!

வேண்டிய விஷயம். பெரிய நிறுவனங்கள் தயாரித்த திரைப்படங்கள் மற்றும் தொலைக் காட்சி நிறுவனங்கள் உரிமம் பெற்று வைத்திருந்த திரைப்படங்களே இன்றைக்கு டிஜிட்டல் வடிவம் கண்டிருக்கின்றன. டிஜிட்டல் வடிவில் மாற்றப்படாமல் 3,000-க்கும் அதிகமான திரைப்படங்கள் அழியும் தறுவாயில் இருக்கின்றன.

இந்தியாவில் திரைப்பட ஆவணக் காப்பகத் துக்கான முன்மாதிரி புணே திரைப்பட ஆவணக்காப்பகம். இந்தியாவின் பல்வேறு மொழித் திரைப்படங்களுடன் உலகத் திரைப் படங்களும் அங்கு பாதுகாக்கப்படுகின்றன. திரைப்பட ஆய்வாளர்கள், பொதுமக்கள் என்று யாரும், குறிப்பிட்ட தொகையைக் கட்டணமாகச் செலுத்தி அங்குள்ள திரைப்படங்களைப் பார்க்க முடியும். அதன் நூலகத்தில் ஆங்கிலம், இந்தி மற்றும் பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட




'இரு சகோதரர்கள்' பட விளம்பரம் (1936)

திரைப்படம் குறித்தான ஆய்வு, விமர்சனம் மற்றும் திரைக்கதை நூல்களும், திரை இதழ்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. சத்யஜித் ராய், ரித்விக் கட்டக், ஷ்யாம் பெனகல், சாந்தாராம் போன்ற இந்திய திரைச் சிற்பிகளின் திரைப்படங்கள் குறித்த முக்கியக் கட்டுரைத் தொகுப்புகள், இந்தியத் திரைப்படங்களைப் பற்றிய தகவல் திரட்டு என அங்குள்ள சேகரிக்க ப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் திரைப்பட ஆவணக்காப்பகம் அமைப்பதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். முதற்கட்டமாக, தனியார் நிறுவனங்களின் வசம் இருக்கும் படங்களைப் பெற்று அவற்றை டிஜிட்டல் வடிவில் மாற்ற வேண்டியது முக்கியப் பணி. இதன் மூலம் எஞ்சியிருக்கும் திரைப்படங்களையாவது தக்கவைத்துக்கொள்ள முடியும். நல்ல விலை கொடுக்க முன்வந்தால், கிடைக்கப் பெறாத அரிய திரைப்படங்களின் பிரதிகள்கூட கிடைக்கலாம். அந்தத் திரைப்படங்களைப் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். புணே திரைப்பட ஆவணக்காப்பகத்துக்காக ஆரம்பகாலத் திரைப்படங்களைத் தேடித்தேடிச் சேகரித்த பி.கே.நாயரை முன்னுதாரணமாகக் கொண்டு பழைய தமிழ்ப் படங்களைச் சேகரித்துத் தர தன்னார்வலர்கள் முன்வர வேண்டும்.

ஏன் திரைப்படங்களைப் பாதுகாக்க வேண்டும்? நமது கலை வடிவங்களிலேயே, ஒவ்வொரு காலகட்டத்தையும் துல்லியமாகப் பதிவுசெய்திருப்பவை திரைப்படங்கள்தான். 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சென்னைக்கும் தற்போதைய சென்னைக்குமான வேறுபாட்டைக் காட்சிபூர்வமாக உணர வேண்டுமெனில், திரைப்படங்களே அதற்கான ஆதாரம். 80-களில் வெளியான திரைப்படங்களில் காட்டப்பட்ட சில ஏரி, குளங்கள் இன்று ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதற்குத் திரைப்படங்களே சாட்சியாக விளங்குகின்றன. திரைப்படத்தை வணிகநோக்கில் அணுகாமல், ஒவ்வொரு காலகட்டத்தின் ஆவணம் என்ற உணர்வுடன் அணுகுவதே இன்றைய தேவை.

**- சந்தோஷ் சிவன்**

# எந்த தவறுமே செய்யாத நாங்கள் இன்னமும் தண்டனை அனுபவித்து வருகிறோம்!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991-ம் ஆண்டு மனித வெடிகுண்டால் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் அவருடன் சேர்ந்து 17 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 3 பேர் விடுதலைப் புலிகள். மீதமுள்ள 14 பேர் காவலுக்கு வந்த போலீஸார் உள்ளிட்ட பொதுமக்கள். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சந்தன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன், நளினி ஆகியோர் ஆயுள் கைதிகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், 27 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் பேரறிவாளன் உட்பட 7 பேரையும் விடுதலை செய்யும்

அதிகாரம் தமிழக அரசுக்கு இருப்பதாக உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதைத்தொடர்ந்து 7 பேரையும் விடுவிப்பதற்கான பணிகளை தமிழக அரசு செய்து வருகிறது. ஆனால் 7 பேரையும் விடுதலை செய்யக் கூடாது என்று ராஜீவ் காந்தியுடன் பலியானவர்களின் குடும்பத்தினர் திடீர் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். குண்டு வெடிப்பின்போது காஞ்சிபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அனுசியா டெய்சி எர்னஸ்ட் படுகாயம் அடைந்தார். அவரது இடது பக்கம் முழுவதும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. இடது கையில் 2 விரல்களும் துண்டாகி விட்டன. காவல் உதவி கண்காணிப்பாளர் வரை பதவி உயர்வு பெற்று கடந்த மார்ச் மாதம் பணி ஓய்வு பெற்றுள்ளார்.

கொலை குற்றவாளிகள் 7 பேரையும் விடுதலை செய்யும் தமிழக அரசின் நடவடிக்கை வேதனை அளிக்கிறது. இவற்றை தமிழக அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும். குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களில் 9 பேர் காவல் துறையைச் சேர்ந்தவர்கள். உயிர் இழந்தவர்களின் குடும்பம் இன்னும் அந்த வேதனையில் இருந்து விடுபட வில்லை. காயம் அடைந்த நான் உட்பட 20-க்கும் மேற்பட்டோர் குண்டு சிதறல்களால் ஏற்பட்ட காயத்தால் இன்று வரை வேதனை அனுபவித்து வருகிறோம். சிகிச்சைக்காக பல லட்சம் செலவு செய்துள்ளோம். குண்டு வெடிப்பு நிகழ்ந்து 27 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அனைத்தும் மறந்து விடுமா, ராஜீவ் காந்தி உயிரைத்தான் எங்களால் காப்பாற்றமுடியவில்லை. அவரை கொலை செய்த குற்றவாளிகளுக்காவது தண்டனையை வாங்கி கொடுக்காமல் ஓய மாட்டோம். உதவி ஆய்வாளர் அனுசியா உதவி ஆய்வாளர் அனுசியா.



குண்டு வெடிப்பில் ராஜீவ்காந்தியுடன் எஸ்பிசிஐடி ஆய்வாளர் எட்வர்டு ஜோசப்பும் பலியானார். அவரது மனைவி சென்னை சூளைமட்டில் வசித்து வருகிறார். அவர் கூறும்போது, “7 பேரை விடுதலை செய்தாலோ அல்லது தொடர்ந்து சிறையில் அடைத்தாலோ எனது கணவர் திரும்ப வரப்போவதில்லை. பேரறிவாளன் தாயார் உட்பட பலரும் அவர்களின் நிலையை பற்றியே கவலைப்படுகின்றனரே தவிர, இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட பலரது குடும்பத்தினர் இன்னமும் வேதனை அனுபவித்து வருகின்றனர்.

இதைப்பற்றி அவர்களுக்கு எந்த கவலையுமே இல்லை. எனது கணவர் இறந்தபோது எனக்கு 4 மற்றும் 2 வயதில் இரண்டு குழந்தைகள். இவர்களை வைத்து, கணவர் இல்லாமல் தினமும் நான் எவ்வளவு வேதனை அடைந்து இருப்பேன். நளினிக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டபோது அவர் கர்ப்பமாக இருந்தார். அப்போது நான், ‘எனது குழந்தைகளுக்கு தந்தை இல்லாமல் வளர்க்கவே பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. அந்த குழந்தைக்கு தந்தையும், தாயும் இல்லாமல் போனால் எப்படி இருக்கும்.

எனவே தூக்கு தண்டனை வேண்டாம் என்று அப்போது நான் கூறினேன்" என்றார்.

இந்த சம்பவத்தில் பலியானகாஞ்சிபுரம் காவல் நிலையகான்ஸ்டபிள் தர்மனின்மனைவி வேதவள்ளி தற்போது விருகம்பாக்கத்தில் வசிக்கிறார். அவர் கூறும்போது, "எனது கணவர் இறந்த பின்னர் 3 குழந்தைகளை வளர்க்க நான் பட்டகஷ்டங்களை, இப்போது நினைத்தாலும் அழுகை மட்டுமே வரும். தவறு செய்தவர்கள் சிறையில் இருந்து வெளியே வந்து சந்தோசமாக இருப் பார்கள். ஆனால், எந்த தவறுமே செய்யாத நாங்கள் இன்னமும் தண்டனை அனுபவித்து வருகிறோம்" என்றார். 7 பேர் விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவித்து தர்மனின் மகன் ராஜ்குமார், புதுவை கடற்கரை காந்தி சிலை முன்பு நேற்று முன்தினம் உண்ணாவிரத போராட்டம் நடத்தி பரபரப்பை ஏற்படுத்தினார்.

பலியானவர்களில் ஒருவரான சம்தானி பேகத்தின் மகன் அப்பாஸ் சென்னை பாடியில் வாட்ச்கடை நடத்திவருகிறார். அவர்கூறும்போது, "எனது அம்மா இறந்தபோது எனக்கு 8 வயது. ஏற்கனவே தந்தையை இழந்த நான், இந்த சம்பவத்தால் தாயையும் இழந்து அனாதையா னேன். அம்மாவின் உடல் பல பாகங்களாக சிதறிய நிலையில், அவரது சடலத்தை என்னிடம் கொடுத் தார்கள். அப்போது நான் எவ்வளவு துயரப்பட் டிருப்பேன். என் தாயார் கொல்லப்பட்டதில் இருந்துநீண்ட நாட்களாக அழுது கொண்டே இருந்தேன். குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு பின்னர் எங்கள் வாழ்க்கையே பாழாகிவிட்டது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் ஒரு நாள் வாழ்ந்து பாருங்கள், அதன்பின்னர் குற்ற வாளிகளை விடுவிக்கவா வேண்டாமா என்று முடிவு எடுங்கள். எனது தாயாரை கொலை செய்தவர்களை விடுதலை செய்வது எப்படி நியாயமாகும்" என்றார்.

சென்னை பல்லாவரம் காவல் ஆய்வாளராக இருந்த ராஜகுருவும் அப்போது பலியானார். அவரது மனைவி பாலசரஸ்வதி கூறும்போது, "என் வாழ்க்கையில் எல்லாமுமாக இருந்த என் கணவரை இழந்து தவித்தேன். என் 2 பிள்ளைகள் தந்தையின் உடலை கூட பார்க்கவில்லை. அந்த அளவுக்கு பொட்டலமாகத்தான் உடலை கொடுத்தார்கள். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டபோது சம்பவ இடத்தில் ஒற்றைக்கண் சிவராசன், தணு ஆகியோருடன் இப்போது சிறையில் உள்ளவர்களும் இருந்தனர். இதற்கு ஆதாரமாக என்னிடம் புகைப்படங்கள் உள்ளன. இப்போது அனைவரும் அப்பாவிகள் என்பதுபோல பேசிவருவது படுகொலையில் உயிரை இழந்தவர்களின் குடும்பங்களில் கடும் வேதனையை ஏற்படுத்தி உள்ளது. நீண்ட நாட்கள் சிறையில் இருந்தால் கொலை குற்றவாளிகளை விடுதலை செய்யலாம் என்றால், யார் வேண்டுமானாலும் கொலை செய்ய தயங்க மாட்டார்கள்" என்றார்.

**- V.சங்கர்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 044 - 4861 5321




# பாலியல் கல்வி அவசியமா?

ஒரு பெண் தனது வேலைச்சூழலில் தன் திறன்களையும் யோசனைகளையும் கவனப்படுத்துவதற்கு ஆணாக மாற வேண்டிய நிலையும் உள்ளது. ஆண்களைப் போல உரக்கக் குரல் எழுப்ப வேண்டும். ஒரு பெண்ணின் யோசனையோ திறனோ ஏற்கப்பட அவளது தோற்றமும் முக்கியமான அம்சமாக ஆண்களிடம் கருதப்படுகிறது.

இந்த நிலைமைகளிலிருந்து விடுபட ஒரு ஆண், முதலில் பெண்ணின் நிலையிலிருந்து அவளைப் பார்க்கும் பக்குவத்தை அடைய வேண்டும். ஆணின் சிந்தனை முறையும் பெண்ணின் சிந்தனை முறையும் வேறு வேறு என்பதை அவன் தெரிந்துகொள்ள வேண்டும். ஆண் ஒன்றுக்குப் பிறகு ஒன்று என்ற நேர்கோட்டுச் சிந்தனையை (Linear Thinking) உடையவன்.

பெண்களோ வெவ்வேறு சாத்தியங்களையும் சேர்த்துப் பார்க்கும் இணைச் சிந்தனையைக் (Lateral Thinking) கொண்டவர்கள். இதையெல்லாம் புரிந்துகொள்வதற்கான கல்வி வீட்டிலிருந்தும் பள்ளியிலிருந்தும் தொடங்கப்பட வேண்டும்" என்கிறார்.

பாலினக் கல்வி தொடர்பாக சர்வதேச அளவில் யுனெஸ்கோ சமீபத்தில் வெளியிட்டுள்ள வழிகாட்டுதலில், பாலியல் நடத்தைக் கல்வி ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை விளக்குகிறது. எந்த மாதிரியான சூழ்நிலையில் உடலின் அங்கங்களை அந்தரங்கமாக வைக்க வேண்டுமென்பதில் தொடங்கி தனக்கு ஏற்படும் உணர்வுகளைப் புரிந்துகொள்தல், அதை வெளிப்படுத்தும் நடைமுறை தொடர்பான அறிவு, நம்பத் தகுந்த இடங்கள், நபர்களை அடையாளம் காணும் திறன் ஆகியவை இந்தக் கல்வியால் அதிகரிப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

ஆணுக்கும், பெண்ணுக்கும் சிறுவய-திலிருந்து சேர்ந்து பழகுவதற்கான வாய்ப்பு இல்லாத சூழலிலேயே வன்முறைகள் அதிகம் நடைபெறுவதாக ஐ.ஐ.டி. பேராசிரியை கல்பனா கூறுகிறார். "பாலின சமத்துவத்தைப் பேசுவதற்கும் பழகுவதற்கும் சிறந்த இடம் பள்ளிகள்தாம். திறன்கள், தகுதிகள், தரநிலைகளில் இருவரும் சமமானவர்களே என்று தெரிந்துகொள்வதற்கு இருபாலர் பள்ளிகள் சிறந்தவை. இரண்டு பாலின மாணவர்களையும் பிரித்துவைக்கும்போது பெண்களும் தங்களைப் போன்றவர்கள் என்ற சமநிலை வருவதற்கான சூழல் இல்லாமல் போகிறது. விளையாட்டு வகுப்புகளில் இருபாலின மாணவர்களும் சேர்ந்து விளையாடுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். இன்னொரு பாலினத்தவர் தொடர்பாக மற்றவருக்கு எழும் கேள்விகள், பயங்கள், சந்தேகங்கள் போன்றவற்றை அவர்கள் கேட்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்குமான பயிலரங்குகளை நடத்த வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான தனியார் கல்லூரிகளில் மாணவர்களும் மாணவிகளும் பேசுவதற்குக் கூட அனுமதி இல்லை. இது சமத்துவமில்லாத ஆரோக்கியமற்ற சமூக நிலையையே உருவாக்கும்" என்கிறார்.

"பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்துக்குக் கீழே வரும் கல்லூரிகளில் இளங்கலை படிக்கும் மாணவர்களுக்கு பாலின சமத்துவக் கல்வி (Foundation course on gender studies) பாடமாக உள்ளது. வெறுமனே படித்து தேர்வெழுதிக் கடந்துபோவதற்கல்ல இதுபோன்ற பாடங்கள். ஆண் ஸ்ரீ பெண் சமத்துவ உணர்வு மட்டுமின்றி, சாதி, மதம், வர்க்கம் என எல்லா நிலையிலும் சமத்துவ சிந்தனையும் உணர்வும் பெற்றவர்களே ஆசிரியர்களாக இந்தப் பாடங்களை நடத்த வேண்டும். ஆனால், நடைமுறையில் சூழ்நிலை அவ்வளவு சிறப்பாக இல்லை. பெண்கள் அணியும் உடை தொடர்பான பார்வைகூட இன்னமும் கல்லூரி, பல்கலைக்கழகச் சூழலில் மாறவில்லை. பெண் அணியும் உடைதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாக இருக்கிறது என்ற மனநிலை எல்லா தரப்பிலும் இன்னும் இருக்கிறது.

மத்திய பல்கலைக்கழக மானியக்குழுவின் வழிகாட்டு தலில் கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள 'ஜெண்டர் சேம்பியன் க்ளப்' களில் பங்கேற்கும் ஆண், பெண் தன்னார்வலர்களிடம் கூட பாலியல் சமத்துவ சிந்தனை இல்லாத நிலையையே நாங்கள் பார்க்கிறோம். கல்வி, வேலை சார்ந்து பெண் வீட்டை விட்டு வெளியே போவதை ஏற்றுக்கொண்ட சமூகத்தில் அவள் சமம், எல்லா உரிமைகளும் அவளுக்கும் உண்டு என்ற ஏற்கக்கூடிய மனம் இன்னும் வரவில்லை." என்றார்.

நட்பு, அலுவல்ரீதியான உறவுகள், காதல் போன்ற உறவுகளில் ஆண், பெண், பாலியல் சிறுபான்மையினர் தொடர்பான பரஸ்பரப் புரிதலாலும் மரியாதையாலுமே பாலினரீதியான வன்முறையையும் குடும்ப வன்முறையையும் தவிர்க்க முடியும் என்கிறது ஆஸ்திரேலியாவின் ராயல் கமிஷன் அறிக்கை. பாலுறவு, பாலீர்ப்பு பற்றிய புரிதல், பரஸ்பர மரியாதை அடிப்படையில் எதிர்பாலினத்தவருடனான உறவு ஆகியவை குறித்த கல்வியை வீடு, பள்ளி, கல்லூரி நிலையில் பயிலத் தொடங்குவோம்.

டச்சு: நான்கு வயது முதல் 12 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு அரசு மானியத்தில் பாலியல் கல்வி பள்ளிப் பாடத்தில் ஒரு பகுதியாக உள்ளது. உறவுகள், பால் ஈர்ப்பு, அரவணைத்தல், நட்பு, குழந்தை பிறப்பு போன்றவை பற்றி கற்றுக்கொடுக்கப்படுகின்றன. 14 வயதுக்கு மேல் இனப்பெருக்கம், உடலுறவு, பாலுறவால் ஏற்படும் நோய்கள் பற்றிய பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன.



டென்மார்க்: டென்மார்க்கைப் பொறுத்தவரை பாலியல் பற்றி மிகவும் எளிமை யாகவும் துல்லியமாகவும் சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுக்கப் படுகிறது. பாதுகாப்பான உறவுகள் தொடர்பாக சித்திரப் புத்தகங்கள் வழியாக அவர்களுக்குக் கற்றுத்தரப்படுகிறது. பெற்றோர் உள்ளிட்ட பெரியவர்களிடம் குழந்தைகள் தங்கள் பாலியல் சந்தேகங்களைத் தெரிந்துகொள்வது, அங்கே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜெர்மனி: பள்ளியிலும் சமூகத்திலும் குழந்தைகள் பாலியல் கல்வியையும் சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக் கொள்வது நடைமுறையாகவே உள்ளது. 1974-ல் வெளியான ஆபாசமற்ற புகைப்படங்களுடன் பாலியல் கல்வியைப் போதிக்கும் 'ஸைக் மால்' நூல் பதின்பருவத்துக்கு முந்தைய குழந்தைகளுக்காக வெளியாகி அவர்களிடம் மிகப்பெரிய செல்வாக்கைப் பெற்றது. ஆனால், இதே புத்தகம் அமெரிக்காவில் பின்னர் வெளியானபோது விநியோகம் தடைசெய்யப்பட்டது.

– ஆசிரியர்

# கலாச்சாரம், பண்பாடு மீது கோபப்பார்வை வீசிய நீதித்துறை!

செப்டம்பர் மாதத்தில், மிக முக்கியமான தீர்ப்புகளைத் தொடர்ச்சியாக வழங்கிய உச்ச நீதிமன்றம், செப்டம்பர் 27-ல் குறிப்பிடத்தக்க இன்னொரு தீர்ப்பையும் வழங்கியது. இந்திய தண்டனைச் சட்டத்தின் 497-வது பிரிவு, அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று கூறியிருப்பதன் மூலம், திருமணத்தை மீறிய உறவு குற்றமல்ல என்று தீர்ப்பளித்திருக்கிறது உச்ச நீதிமன்றம்.

திருமணத்தை மீறிய உறவைக் குற்றமாகக் கருதும் மிகச் சில நாடுகளில் ஒன்றாக இதுவரை இந்தியா இருந்துவந்தது. திருமணமான பெண் என்பதை அறிந்த ஓர் ஆண், அதாவது 'வெளியாள்' அப்பெண்ணுடன், திருமணத்தை மீறிய உறவுகொண்டிருக்கிறார் என்றால், அந்த ஆண் மட்டுமே தண்டிக்கப்படுவார்; தவறிழைக்கும் வாழ்க்கைத் துணை தண்டிக்கப்பட மாட்டார் என்பதே இந்தக் குற்றம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது.

இந்த உறவுக்கு அப்பெண்ணின் கணவர் சம்மதிக்காதபட்சத்தில், இது ஒரு குற்றமாகக் கருதப்பட்டது. அதாவது, மனைவி என்பவள் கணவரின் சொத்து என்றே கருதப்பட்டாள். எனவே, திருமணத்தை மீறிய உறவில் கணவர் 'பாதிக்கப்பட்டவ'ராகக் கருதப்பட்டார். இது தொடர்பாக, கணவர் புகாரளிக்க முடியும் என்ற நிலை இருந்தது. இந்த வாய்ப்பு, மனைவிக்கு அளிக்கப்படவில்லை. அதாவது, திருமணத்தை மீறிய உறவுகொண்டிருக்கும் கணவர் மீது புகாரளிக்கும் வாய்ப்பு பெண்ணுக்கு வழங்கப்படவில்லை.

எந்த ஒரு செயலும் குற்றமாகக் கருதப்பட வேண்டும் எனில், அது மிகப் பெரிய அளவில் சமூகத்துக்கு எதிரான செயலாக இருக்க வேண்டும். இந்தச் சட்டப் பிரிவு நீடிக்க வேண்டும் என்று விரும்பியவர்கள் முன்வைத்த முக்கியமான வாதங்கள்: 'திருமண பந்தத்தை மீறுகின்ற வெளியாள் தண்டிக்கப்பட வேண்டும்; ஒழுக்கக் கேடான இந்தச் செயலுக்குத் தண்டனை வழங்கப்படுவதைச் சட்டம் உறுதிசெய்ய வேண்டும்' என்பவையாகும். இந்த மீறலானது, திருமணம் எனும் நிறுவனத்துக்கு எதிரான குற்றம். எனவே, இது சமூகத்தின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் எதிரான மீறல் என்றே பார்க்கப்பட்டது.

நல்லவேளையாக, இந்த வாதம் உச்ச நீதிமன்ற அமர்வால் ஒருமனதாக நிராகரிக்கப்பட்டிருக்கிறது. வாழ்க்கைத் துணைகளுக்கு இடையிலான திருமணத்தை மீறிய உறவு என்பது ஒரு தனிப்பட்ட விஷயம் என்றும், சிவில் சட்டத்தின்படி இதைக் காரணம் காட்டி விவாகரத்து கோரலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டிருக்கும் எந்தத் தரப்புக்கு எதிராகவும் குற்ற நடவடிக்கையைப் பிரயோகிக்க வேண்டியதில்லை என்று கூறியிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அந்நியோன்யமான, தனிப்பட்ட அளவிலான தேர்வை மேற்கொள்பவர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்குவதை அரசால்



நியாயப்படுத்திவிட முடியாது என்றும் கூறியிருக்கிறது.

மேலும், திருமணத்தை மீறிய உறவு விஷயத்தில் இரு பாலினத்தவர்களுக்கும் தண்டனை வழங்குவது தொடர்பாகக் கருத்து தெரிவித்திருக்கும் உச்ச நீதிமன்றம், இந்த விஷயம் தனிப்பட்டரீதியிலானது என்றும், அதில் தலையிடுவது தனிநபர்களின் அந்தரங்கத்தில் தலையிடுவதாகும் என்றும் கூறியிருக்கிறது.

எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால், இதுவரை இருந்த சட்டத்தின்படி, இந்தக் குற்றத்தில், கணவர் மட்டுமே பாதிக்கப்பட்டவராகவும், அவரது சொத்து (அதாவது அவரது மனைவி) பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்பட்டது. பெண் என்பவள் தனது கணவரின் தனிப்பட்ட சொத்து எனும் இந்தப் பிற்போக்கான, ஆணாதிக்கரீதியான கருத்தை நீக்கியிருக்கும் உச்ச நீதிமன்றம்,

497-வது சட்டப் பிரிவானது, பெண்களின் பாலியல் தேர்வையும், உறவுகள் தொடர்பான அவர்களது உரிமையையும் மறுத்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறது. மேலும், இந்த சுய அதிகார இழப்பு என்பது அவர்களது அந்தரங்க உரிமையையும், கண்ணியத்துடன் வாழும் உரிமையையும் மீறுவதாகும். இதன் மூலம் அரசியல் சட்டக்கூறு

21 - ன்படி வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்பதை விளக்க, கே.எஸ்.புட்டாஸ்வாமி எதிர் இந்திய ஒன்றியம் வழக்கை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. அத்துடன், அரசியல் சட்டக்கூறு 14-ன் கீழ் உத்தரவாதம் வழங்கப்பட்ட சம உரிமையையும் 497-வது சட்டப் பிரிவு மீறியது; பெண் என்பவள் செயலற்ற நிறுவனமாகவும், கணவரின் உடைமையாகவும் நடத்தப்பட்டாள் என்றும் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. 497-வது சட்டப் பிரிவானது, திருமண உறவில் சமமான பங்குதாரர் எனும் உரிமையுள்ள ஒரு தனிநபர் எனும் மனைவியின் அடையாளத்தைச் சிதைத்து, கணவருக்குச் சாதகமான நிலையை உருவாக்கவே வழிவகுத்தது.

ஒரு அரசியல் சட்ட ஆட்சியில், திருமணம் என்பது, வாழ்க்கைத் துணைகளுக்கு இடையிலான சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அரசியல் சட்டத்தின் மூன்றாவது பாகம் உறுதியளிக்கும் சுதந்திரத்தைப் பெறுவதில் இருவருக்கும் சம உரிமை உண்டு. என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிறது. திருமண உறவில் சமமான உரிமைகளையும் வாய்ப்புகளையும் இரு தரப்புக்கும் வழங்காமல் இருப்பது என்பது பாரபட்சமானது மட்டுமல்ல, அவர்களது சம உரிமையை மீறுவதும் ஆகும்.

497-வது சட்டப் பிரிவின்கீழ், சட்ட நடவடிக்கையிலிருந்து பெண்களுக்கு விலக்கு அளிப்பது என்பது அவர்களைப் 'பாதுகாக்கிறது' என்றும், பெண்கள், குழந்தைகள் நலன் தொடர்பான சட்டங்களை அரசு உருவாக்க வழிவகுத்த 15(3)-வது சட்டக்கூறுக்கு ஒத்திசைவானது என்றும் முன்பு வாதங்கள் வைக்கப்பட்டன. இரு தாரத் திருமணம் அதிகமாக இருந்த காலகட்டத்தில் இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. கணவர் பலரைத் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், மனைவியைத் தண்டிப்பது நியாயமல்ல என்று இந்திய தண்டனைச் சட்டத்தை உருவாக்கிய மெக்காலே பிரபு கருதினார்.

எனினும், இந்த தர்க்கத்தில் இருந்த பிழையைச் சுட்டிக்காட்டியிருக்கும் உச்ச நீதிமன்றம், தனது மனைவியுடன் திருமணத்தை மீறிய உறவு கொண்டிருக்கும் வேறொரு ஆணுக்கு எதிராக வழக்கு தொடரும் உரிமை ஆணுக்கு இருந்துவந்த நிலையில், அதேபோல் வழக்கு தொடர்வதற்கான உரிமையைப் பெண்களுக்கு மறுக்கும் இந்தச் சட்டம் நன்மை பயக்கக்கூடியது என்று கருதிவிட முடியாது; சொல்லப்போனால், இச்சட்டம் பாரபட்சமானது என்றும் கூறியிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் இம்முடிவுக்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துவருவது ஆச்சரியமளிக்கிறது. பல நாடுகள் இதுபோன்ற சட்டங்களை எப்போதோ கைவிட்டுவிட்டன. சமத்துவத்துக்கான போராட்டங்கள் பல்வேறு தளங்களில் இன்றைக்கும் தொடர்ந்துவரும் நிலையில், வழக்கொழிந்த இந்தச் சட்டத்தை நீக்கும் முடிவு, நிச்சயம் சரியான திசையை நோக்கிய முன்னெடுப்பாகும்!

**– S.ராம்குமார்**

## ஒரு பக்க சிறுகதை

# யாரிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள போகிறோம்

ஒரு ஊர்ல ஒரு அறிவாளி இருந்தார். அவருக்கு கடவுள் பக்தி ரொம்ப அதிகம். அடிக்கடி கோவிலுக்கு போவார். கடவுளை வேண்டிக்குவார். அதுக்கப்புறம் காட்டுக்கு போவார். விறகு வெட்டுவார். அதைக் கொண்டு போய் விற்பனை செய்வார். ஓரளவுக்கு வருமானம் வந்தது. அதை வச்சிக்கிட்டு நிம்மதியா வாழ்க்கை நடத்திகிட்டு இருந்தார்.

ஒரு நாள், அவர் காட்டுக்குப் போகும் போது ஒரு நரியைப் பார்த்தார். அந்த நரிக்கு முன்னங்கால் ரெண்டுமே இல்லை. ஏதோ விபத்துல இழந்துட்டது போல இருக்கு. அது பாட்டுக்கு ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கு... அதை இவர் பார்த்தார். அப்போது இவர் மனசுல ஒரு சந்தேகம். “இந்த நரிக்கு ரெண்டு காலும் இல்லை... அப்படி இருக்கறப்போ இது எப்படி வேட்டையாடி தன்னுடைய பசியைப் போக்கி கொள்ள முடியும்..?” அப்படின்னு யோசிக்க ஆரம்பிச்சார்.

இப்படி யோசிச்சுகிட்டு இருக்கும் போதே அந்த பக்கமா ஒரு புலி வந்தது. அதைப் பார்த்தவுடனே ஓடி போய் ஒரு மரத்துக்கு பின்னாடி ஒளிஞ்சிகிட்டு என்ன நடக்குதுன்னு கவனிக்க ஆரம்பிச்சார். அந்த புலி என்ன பண்ணிச்சுன்னா... ஒரு பெரிய மானை அடிச்சி இழுத்துகிட்டு வந்தது. அதை சாப்பிட ஆரம்பித்தது. சாப்பிட்டது போக மீதியை அங்கேயே விட்டுட்டு சென்றுவிட்டது.

புலி போனதை அறிந்து, கால் இல்லாத அந்த நரி மெதுவாக நகர்ந்து வந்து மிச்சமிருந்ததை சாப்பிட்டது. திருப்தியாக அங்கி ருந்து அகன்றது. இவ்வள வையும் மரத்துக்கு பின்னாடி நின்னு நம்ம ஆள் கவனிச்சி பார்த்துகிட்டு இருக்கார். இப்ப அவர் யோசிக்க ஆரம்பிச்சார். “ரெண்டு காலும் இல்லாத ஒரு வயசான நரிக்கே ஆண்டவன் சாப்பாடு போடறான். அப்படி இருக்கறப்போ... தினமும் கோவிலுக்கு போய் சாமி கும்பிடற நமக்கு சாப்பாடு போடாம விட்ருவானா ? நமக்கு கடவுள் பக்தி வேற அதிகம். நாம எதுக்கு அனாவசியமா வெயில்லயும் மழைலயும் கஷ்டபடணும்..? எதுக்காக வியர்வை சிந்தி விறகு வெட்டணும்...?



இப்படி யோசிச்சார். அதுக்கப்பறம் அவர் காட்டுக்கே போறதில்லை. கோடாலியை தூக்கி எறிஞ்சிட்டாரு. பேசாம ஒரு மூலையிலே உக்கார்ந்துட்டார். அப்பப்போ கோவிலுக்கு மட்டும் போயிட்டு வருவார். “கடவுள் நம்மைக் காப்பாத்துவார். அவர் நமக்கு வேண்டிய சாப்பாட்டைக் கொடுப்பார்” அப்படின்னு நம்பினார். கண்ணை முடிகிட்டு கோயில் மண்டபத்துலேயே ஒரு தூண்ல சாஞ்சி உக்காந்துகிட்டார் .

ஒவ்வொரு நாளும் போய்கிட்டே இருக்கு. சாப்பாடு வந்த பாடில்லே..! இவர் பசியால் வாடி போனார். உடம்பு துரும்பா இளைச்சு போய்டுச்சு. எலும்பும் தோலுமா ஆயிட்டார். ஒரு நாள் ராத்திரி நேரம்.. கோயில்ல யாருமே இல்லை. இவர் மெதுவா கண்ணை திறந்து கடவுளை பார்த்தார்.

“ஆண்டவா..! என்னுடைய பக்தியிலே உனக்கு நம்பிக்கை இல்லையா...? நான் இப்படியே பட்டினி கிடந்தது சாக வேண்டியது தானா..? காட்டுல அந்த நரிக்கு புலி மூலமா சாப்பாடு போட்டியே..! அதை பார்த்துட்டு தானே இங்கே வந்தேன்..! என்னை இப்படி தவிக்க விட்டுட்டியே..! இது நியாயமா ?” என்று புலம்பினார்.

இப்போ கடவுள் மெதுவா கண்ணை திறந்து சொன்னாராம். “முட்டாளே..! நீ பாடம் கற்று கொள்ள வேண்டியது நரிகிட்ட இல்ல..! புலிகிட்ட..! புலியைப் போல் உழைத்து சாப்பிட்டு, மீதியை இயலாதவர்களுக்கு தானமா கொடு” என்று சொன்னாராம்.

நாம் யாரிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள போகிறோம் என்று நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

– ஆசிரியர்

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

Makkal Visaranai Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed , at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,


விரைவில்...
உண்மை, துணிவு, நேர்மை
அரசியல் தீர்ப்பு
சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்
ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன்
மீண்டும் தாமரை மலருமா?

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்

- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements
  and anything















No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, 044 - 4861 5321**